Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்
மலர் - 36    இதழ் - 3    மார்ச் - 2023

தனிப்பிரதி
ரூ.10/-



**ஜெபியுங்கள் !** **23 – ஆம்** **பங்குபெறுங்கள் !!**

# வேனிற்கால வேதாகம முகாம்

மற்றும்

## "திருமறை தியானம்" தொலைக்காட்சி நேயர்கள் & "திருமறை ஆசான்" வாசகர் கருத்தரங்கம்

இடம் :

**YMCA வளாகம், ஏலகிரி மலை.**

(வேலூர் மாவட்டம்)

ஈரோடு - சென்னை இரயில் மார்க்கத்தில்,
ஜோலார்பேட்டை சந்திப்பிலிருந்து சுமார் 22 கி.மீ.
திருப்பத்தூர் பஸ் நிலையத்திலிருந்து சுமார் 30 கி.மீ.

**நாள் : மே, 8,9,10 - 2023**

**(திங்கள், செவ்வாய், புதன்)**

**பதிவுக் கட்டணம்**

பெரியவர்கள் ரூ. 900 /-

சிறியவர்கள் ரூ. 600 /-

முன் பதிவுக்கு முந்துங்கள்
பதிவு செய்வது அவசியம்

## ஆசானின் அறிவுரையிலே ...


| | |
|---|---|
| 1. ஆசிரியர் உரை | 3 |
| 2. நரகம் பற்றி வேதாகம... | 11 |
| 3. பெண்கள் பகுதி | 15 |
| 4. வாலிபர் பகுதி | 19 |
| 5. சிறுவர் பகுதி | 22 |
| 6. பகை உணர்வின் பக்க... | 23 |
| 7. பொய்யான மனித சபை | 26 |
| 8. உயிரோடிருக்கிறவரை... | 31 |


- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தைக் கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை / அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தை தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 36 March - 2023 Issue - 3


ஆசிரியர் உரை

## அடிமைச் சிறுமியிடமிருந்து...

**சீ**னாய் மலையிலிருந்து கல்வாரி மலை வரை வாழ்ந்த இஸ்ரவேல் ஜனங்களைப் பக்தி ரீதியாக நெறிப்படுத்தி, ஆன்ம வாழ்வில் செழுமைப்படுத்தும் பெருநோக்கோடு பரலோக தேவனால் மோசே தாசன் மூலம் கொடுக்கப்பட்டது தான் ஓர் அறுநூற்றுப் பதிமூன்று கட்டளைகளை உள்ளடக்கிய நியாயப் பிரமாணம். இந்நியாயப்பிரமாணம் நடைமுறையில் இருந்த கால கட்டத்தில் ஏராளமானவர்களின் பெயர்கள் வேறுபட்ட காரணங் களுக்காக வேதாகமத்தில் இடம் பெற்றுள்ளது. இப்படி எழுதப் பட்டுள்ள எல்லோருடைய பெயர்களும் வேதத்தை வாசிப்பவர் களின் நெஞ்சில் நின்று விடுவதில்லை. ஆம், பலருடைய பெயர் கள் நீர்க்குமிழி போன்று கண்ணில் பட்டு மறைந்து விடும். ஆனால், குறிப்பிட்டவர்களின் பெயர்கள் ஏதோ ஒரு காரணத்தினிமித்தம் மனதில் பதிந்து விடும். இப்படித் தேவனை நேசிக்கும் பக்தர்களின் மனதில் இடம் பிடித்த ஒரு பெயர்தான் சீரிய நாட்டுப் படைத் தளபதியாக இருந்த நாகமான். இவன் தன் பக்தி சிரத்தையால் அந்த இடத்துக்குத் தகுதியாகவில்லை. மாறாக, இவனைக் கடுமையாகப் பாதித்திருந்த தொழு நோய் நிமித்தமாகவும், அந்தத் தொழு நோயிலிருந்து ஓர் அடிமைச் சிறுமியின் ஆலோசனையின் பேரில் இவன் பெற்றுக்கொண்ட சுகத்தினிமித்தமாகவும் அவ்வரிசையில் தன்னையும் சேர்த்துக் கொண்டான்.

இவன் பற்றிய காரியங்களை 2 ராஜா. 5–ம் அதிகாரத்தில் நாம் காண முடியும். இந்த அதிகாரத்தைப் படிக்கும்போதும், இதிலுள்ளவைகளை எழுதும்போதும், இந்த அதிகாரத்தை மையப்படுத்திப் பிரசங்கிக்க விரும்பும்போதும் அநேகராகிய நம்கண்களுக்குப் பிரதானமாகத் தெரிபவன் படைத்தளபதியும்,

தொழுநோயாளியுமான **நாகமான்** தான். இவ்வதிகாரத்திற்கும், இதில் சொல்லப்பட்டுள்ள சம்பவத்திற்கும் இவன் சம்பந்தம் இல்லாதவன் என்று நான் கூறவில்லை. மாறாக, இவனைத் தாண்டி கண்டிப்பாகக் கவனிக்கப்பட வேண்டிய இன்னொரு பாத்திரம் இருக்கும்போது அதை நாம் போகிற போக்கில் கடந்து போய் விடுகிறோமே அது பற்றித்தான் குறிப்பிடுகிறேன். ஆகவே, அற்பமாய் எண்ணப்படும் நிலையிலிருக்கிற ஓர் அடிமைச் சிறுமியிடமிருந்து நமக்கான பக்திப் பாடங்கள் என்னவென்று இம்மாதம் கற்றுக்கொள்ள முயற்சிப்போம்.

அதற்கு முன்பாக, நாம் நமது வழக்கத்தின்படி, இதன் பின்னணித் தகவல்களுக்குள்ளாகக் கடந்து வந்து விடுவோம். சரியா?

இரண்டு ராஜாக்கள் புத்தகம் வாக்குத்தத்த பூமியில் ஒன்றுபட்ட ராஜ்ஜியமாக உருவெடுத்த அரசாட்சிப் பிறகு சாலமோன் ராஜாவுக்கும் பிறகு வடக்கு, தெற்கு என்று பிரிந்த நிலையில் வடக்கு ராஜ்ஜியத்தின் 130 ஆண்டுகளையும், தெற்கு ராஜ்யத்தின் 250 ஆண்டுகளையும் உள்ளடக்கியுள்ளது. இந்நூலில்இன்னொரு முக்கிய கதாபாத்திரம் எலிசா.

இப்படிப்பட்ட ஓர் நூலின் 5 –ம் அதிகாரத்தில் வருவது தான் நாகமானின் சம்பவம். இந்த நாகமான் அந்நாட்களில் ஒரு சீரியா தேசத்து ராஜாவாகிய பெனாதத்தின் படைத் தளபதியாக இருந்தான். இவன் பெயருக்கான பொருள் ''இனிமையாயிரு'' என்பது. இவன் பெயரில் இனிமை இருந்தாலும், இவன் வாழ்க்கையில் கடுமையான **கசப்பு** தான் இருந்தது. காரணம், இவன் ஒரு குஷ்டரோகியாயிருந்தான். பணம், புகழ், பேர் என்று எல்லாம் இருந்தும் மகிழ்ச்சியும், சமாதானமும் இல்லை. பணத்தினால் இவைகளைப் பெற முடியாது என்பதற்கு நாகமான் சம்பவம் சிறந்த உதாரணம். அப்படி வாங்க முடிந்திருந்தால், பராக்கிரமத்தோடு செல்வத்தையும், செல்வத்தோடு செல்வாக்கையும் பெற்றிருந்த இவன் நிச்சயம் பெற்று மகிழ்ந்திருப்பான். இதற்காக அன்றைய உலகின் எந்த மூலையில் வைத்தியம் கிடைத்திருந்தாலும் போய் முட்டி மோதிப் பார்த்திருப்பான். இன்னும் சொல்லப் போனால், வைத்தியத்திற்காக இவன் போகாத இடமும், சந்திக்காத மனிதர்களும் இருந்திருக்க மாட்டார்கள்.

சரி, இந்த இடத்தில் தான் நம் அடிமைச் சிறுமி காட்சிக்கு வருகிறாள். அந்நாட்களில் வலிமை யோடிருந்த சீரியப் படை வீரர்களுக்கு, இஸ்ரவேல் தேசத்தின் எல்லைக்குள்ளாகச் சென்று, வேடிக்கை காட்டி, கண்ணில் தெரிபவர்களை விரட்டிப் பிடித்து, சிறைப் பிடித்து அடிமைகளாகக் ஓட்டி வருவது வாடிக்கை. அப்படிக் கொண்டுவரப்பட்ட அற்பப் பிறவிகளில் ஒருத்தி தான்

இச்சிறுமி. இவள் பெயர் நமக்குத் தெரியாது, ஊர் தெரியாது. பெற்றோர் பற்றிய விவரமும் இல்லை. எப்படியோ, அவள் நாகமானின் மனைவிக்குப் பணிவிடைக்காரியாக அமர்த்தப்படுகிறாள். இருக்கிற இடத்திலிருந்து வலுக்கட்டாயமாக இழுத்துவரப்பட்டு, அந்நிய மண்ணில் பணியமர்த்தப்பட இச்சிறுமியின் மனநிலை எப்படியிருந்திருக்குமென்று எண்ணிப்பாருங்கள்!

ஆனால், இந்த அடிமைச் சிறுமி பொதுவான நிலையிலிருந்து முற்றிலும் வேறுபட்டவளாய், நாமெல்லாரும் வாயைப் பிளந்து பார்க்கும்படியான அளவில் ஒழுக்கமும், பக்தியும் ஒருங்கே கொண்டு காரியமாற்றியுள்ளாள். இவள் பெற்றோர் பற்றிய தடயங்கள் நமக்கு இல்லை. ஆயினும், இவள் செயல்பாட்டைப் பார்க்கும்போது, இச்சிறுமியின் பெற்றோரை எப்படியாவது கண்டு பிடித்து ஒரு பெரிய **சலாம்** போட வேண்டுமென்று தோன்றுகிறது. ஏனெனில், பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து (நீதி. 22:6) என்ற போதனையில் உண்மையாய் இருந்துள்ளார்கள்.

இவள் முழுமையான கீழ்ப்படிதலுள்ள உள்ள பணிவிடை மூலமாகத் தன் நாச்சியாரின் நன்மதிப்பைப் பெற்றுள்ளாள். ஒருவர் மீது ஒருவருக்கு நல்லெண்ணம் ஏற்படவில்லையென்றால் சம்பந்தப்பட்டவர் சொல்வதை யாரும் செவிமடுத்துக் கேட்க மாட்டார்கள். அதுவும், வயது குறைந்த ஒரு வேலைக்காரி என்று சொல்லும்போது கேட்கவே வேண்டாம். ஆனாலும், இச்சிறுமி தன் நாச்சியாரின் கவனத்தை ஈர்த்த பணிவிடைக்காரியாக இருந்துள்ளாள்.

ஆணிவேதான், இவள் சொல்லுக்கு நாகமானின் மனைவி தன் செவியைத் திறந்துள்ளாள். ஆம், ''அவள் தன் நாச்சியாரைப் பார்த்து என் ஆண்டவன் **சமாரியாவிலிருக்கிற தீர்க்கதரிசியினிடத்தில் போவாரானால் நலமாயிருக்கும்; அவர் இவருடைய குஷ்ட ரோகத்தை நீக்கி விடுவார்** (2 ராஜா. 5:3) என்று சொன்னதை ஏற்றுக் காரியமாற்றினாள். அப்படி ஏற்றுக் கொள்வதற்கு முன், அவள் செல்வது பல விசாரிப்புகள் பல கோணங்களில் நடந்திருக்கும். ஏப்படியெனில், இந்த அடிமைச் சிறுமியின் வார்த்தைப்படி நாகமான் தன் ஆண்டவனாகிய ராஜாவிடம் போய் சொன்னபோது, சீரியா ராஜா பெனாதத்தும் இதை ஏற்றுள்ளான். ஏற்றுக் கொண்டதோடு இவன் சார்பாக ஓர் நிருபத்தையும் கொடுத்தனுப்பியுள்ளான். இப்படி படைத்தளபதி நாகமானைத் தாண்டி, இரண்டு ராஜாக்களும் சம்பந்தப்படும் ஒன்றாக இக்காரியம் இருந்தபடியால் விசாரிப்புக்கும், விசாரணைக்கும் எவ்விதக் குறையும் இருந்திருக்காது. ஆயினும், எந்த மட்டத்துக்குப் போனாலும், இவள் வார்த்தை நின்றிருக்கிற தென்றால், ஒரு வேலைக்காரி என்ற நிலையைத் தாண்டி நற்பெயர் தான் காரணமாயிருந்துள்ளது.

அவள் வார்த்தையின்படியே இஸ்ரவேலின் ராஜாவுக்கு நிருபம் வாங்கி நாகமான் புறப்பட்டு, தன் தகுதிக்கும், தரத்துக்கும் ஏற்றபடி மிகுந்த வெகுமதிகளையும் கொண்டு சென்றான். இஸ்ரவேலின் ராஜா அதை வாங்கிப் படித்துவிட்டு, ''**தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு ஒரு மனிதனைக் குஷ்டரோகத்தினின்று நீக்கிவிட வேண்டும் என்று அவன் என்னிடத்தில் நிருபம் அனுப்புகிறதற்கு கொல்லவும், உயிர்ப்பிக்கவும் நான் தேவனா? இவன் என்னை விரோதிக்கச் சமயம் தேடுகிறான் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்**'' என்றான் (2 ராஜா. 5:7). ராஜாவின் இப்பிதற்றலை தேவனுடைய மனிதனாகிய எலிசா கேள்விப் பட்டபோது, ...அவன் என்னிடத்தில் வந்து, ''**இஸ்ரவேலிலே தீர்க்கதரிசி**'' உண்டென்பதை அறிந்து கொள்ளட்டும் என்று சொல்லியனுப்பினான் (2 ராஜா. 5:8)

தீர்க்கதரிசியைச் சந்திக்க நாகமான் வரும்போது, பலம் பொருந்திய நாட்டின் தளபதியான தனக்கு தீர்க்கன் எலிசா விடத்தில் பெரும் வரவேற்பு இருக்கும் என்ற எதிர்பார்ப்போடு எலிசாவின் வாசற்படி வந்து நின்றவனுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. **நீ போய் யோர்தானில் ஏழுதரம் முழுகு**'' என்று சொல்லியனுப்பப்பட்ட போது நாகமான் தான் அவமதிக்கப்பட்டதாகக் கருதி, கடுங்கோபம் கொண்டு, திரும்பிப் போக எத்தனித்த நிலையில், வேலைக் காரனின் தலையீட்டால், எப்படியோ வழிக்கு வந்து, தேவனுடைய மனிதனின் வார்த்தைப்படியே **யோர்தானில் ஏழுதரம் முழுகி**, ஒரு சிறு பிள்ளையின் மாம்சம் போன்று சுத்தமாக்கப்பட்டு, இதோ, **இஸ்ரவேலிலிருக்கிற தேவனைத் தவிரப் பூமியெங்கும் வேறே தேவன் இல்லையென்று** அறிக்கையிட்டு நாடு திரும்பினான்.

இச்சம்பவத்தைப் பாதியிலே நிறுத்தக் கூடாதென்பதற்காக இதுவரை வந்துள்ளேன். ஆனால், நம்முடைய தியானத்துக் கானவள் **அடிமைச் சிறுமிதானேயொழிய** நாகமான் அல்ல. அவளிடமிருந்து கிடைக்கும் பாடங்கள் என்னவென்று பார்த்து விடுவோம்.

**I அடிமைச் சிறுமி இரக்க குணமுடையவளாய் இருந்தாள்**

நாகமான் குணமாக்கப்பட்ட சம்பவத்தில் இடம்பெற்றுள்ள அடிமைச் சிறுமியிடமிருந்து நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், அவள் இரக்க குணம் உடையவளாய் இருந்தாள் என்பது.

அவள் இரக்க குணத்திற்கான நேரிடையான வசன ஆதாரம் இல்லை என்று நீங்கள் சொல்லலாம். உண்மைதான் ஆனால், அவள் பற்றி நமக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ள தடயங்களை வைத்துப் பார்க்கும் போது அவள் இரக்க குணம் அற்றவள் என்பதைக் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ள முடியாது.

இச்சிறுமி ஒரு வகையில் ஆபிரகாமைப் போல் தன் இனத்தையும், தன் தேசத்தையும், தன் குடும்பத்தையும் விட்டு வந்தவள். ஆபிரகாமுக்காகிலும் இப்படிச் செய் என்று ஆண்டவரின் அழைப்பு இருந்தது. ஆனால், இவளோ சிறைபிடிக்கப்பட்டு இழுத்து வரப்பட்டவள். அந்நிய மண்ணுக்கு கிட்டத்தட்ட அறியாப் பருவத்தில் வந்து சேர்ந்த இவள், தன் நிலையை எண்ணி வருந்தி துக்கப்பட்டுக் கொண்டிராமல், தன் அவல நிலையைக் கூட ஆண்டவரின் சித்தம் என்று ''யோசேப்பின் மனநிலை'' கொண்டு ஏற்று நாகமானின் மனைவிக்கு அடக்கத்தோடு பணிவிடை செய்து கொண்டிருந்தாள் (வசனம் 2). வசனம் மூன்றின் முதல் பகுதி இவ்விதம் கூறுகிறது. ''அவள் தன் நாச்சியாரைப் பார்த்து என் ஆண்டவன் சமாரியாவிலிருக்கிற தீர்க்கதரிசியினிடத்தில் போவாரானால் நலமாயிருக்கும் என்று.

அதாவது, அவள் வீட்டில் பணிவிடை செய்து கொண்டே அவ்வீட்டின் சூழல் என்ன என்பதைக் கவனித்துள்ளாள். தன் எஜமான் கடும் நோயில் அவதிப்படுகிறதைக் கண்டு, மனமிரங்கி தன்னால் என்ன செய்ய முடியும் என்று எண்ணியுள்ளாள். தான் சொல்வது எப்படிப்பார்க்கப்படும், எந்தளவு ஏற்றுக் கொள்ளப் படும் என்று இவள் சிந்திக்காமல் இருந்திருக்க மாட்டாள்.

எஜமான் நாகமானையும் அவர் படுகிற வேதனையையும், சந்திக்கிற அவமானத்தையும் பார்க்கும் போதெல்லாம் அவள் மீதான இரக்கப் பார்வை அவளுக்கு அதிகரித்துக் கொண்டே வந்திருக்கிறது. இரக்கள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் இரக்கம் பெறுவார்கள் (மத். 5:7) என்ற இயேசுவின் மலைப்பிரசங்க போதனை அவளுக்குத் தெரியாவிட்டாலும், அதன் பொருளை உணர்ந்தவளாக வாழ்ந்துள்ளாள்.

தன் மனத்தாழ்மையுடனான பணிவிடை மூலமாகத் தன் நாச்சியாரின் நம்பிக்கையைப் பெற்று, இனித் தன் பேச்சு பரிசீலிக்கப்படும் என்ற கட்டம் வந்தபோது, தன் வாயைத் திறந்து சமாரியாவில் உள்ள தீர்க்கதரிசியினிடத்தில் போவாரானால் நல்லது என்றாள். இவள் சொன்ன தீர்க்கதரிசி ''தேவனுடைய மனிதன்''. ஆக, இவளின் நம்பிக்கை தீர்க்கனைத் தாண்டி, தீர்க்கனின் தேவன் மீது இருந்துள்ளது. சிறுமைப்பட்டவன் மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான்'' (சங். 41:1) என்பதின் உண்மை அவளுக்கு அந்த இளம் வயதிலேயே தெரிந்துள்ளது!

அருமையானவர்களே! நாம் எப்படிப்பட்டவர்களாக உள்ளோம்? பிறருக்கு இரங்கி நன்மை செய்வதில் நாம் எந்த இடத்தில் உள்ளோம்? அவள் தனக்குப் போதிக்கப்பட்ட போதனையின்படி இரக்க குணத்தை வெளிப்படுத்தி, தேவப் பார்வையில் பாக்கியவதி என்ற நிலைக்கு உயர்த்திக் கொண்டது

போல, நம்மை உயர்த்திக்கொள்ளத் தயாராக உள்ளோமா?. நாகமான் எந்த வைத்தியனாலும் தீர்க்க முடியாத வியாதியில் இருந்த போது, சமாரியாவில் தீர்க்கதரிசி இருக்கிறார் என்று சொன்னதுபோல், யாராலும் தீர்க்க முடியாத பாவ வியாதியில் மக்கள் சிக்கி சீரழியும் போது, அழிந்து போகும் ஆத்துமாக்களின் மீது மனதிரங்கி, **இயேசு என்னும் தீர்க்கதரிசி** இருக்கிறார், அவருடைய ''**கிருபையுள்ள வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிவது நலமாயிருக்கும்**'' என்று சொல்லிச் ''செயல்பட வைப்பதற்கு'' நம்மில் எத்தனை பேர் ஆயத்தமாக உள்ளோம்? அப்படிச் சொல்ல விரும்புகிறவர்கள், சொல்வதற்குண்டான தகுதியை இச்சிறுமி போல் வளர்த்து கொண்டு சொல்லுவோமானால், சொல்லப் படுபவர்கள் யாராக இருந்தாலும் அதைக் கேட்பார்கள் என்பது சிறுமியின் மூலம் நமக்குக் கிடைக்கும் முக்கியப் பாடம்.

## II. அடிமைச் சிறுமி உறுதியுள்ளவளாக இருந்தாள்

நாகமான் குணமாக்கப்பட்ட சம்பவத்தில் இடம் பெற்றுள்ள அடிமைச் சிறுமியிடமிருந்து நமக்குக் கிடைக்கும் இரண்டாம் பாடம், தன் நம்பிக்கையில் உறுதி உள்ளவளாய் இருந்தாள் என்பது.

என் ஆண்டவர் சமாரியாவிலிருக்கிற தீர்க்கதரிசியினிடத்தில் போவாரானால் நலமாயிருக்கும் என்பதோடு நிறுத்தாமல், **அவர் இவருடைய குஷ்டரோகத்தை நீக்கிவிடுவார் என்றாள்** (5:3). தன் பேச்சை நம்பிச் செயல்பட்டு, அது நடக்காமல் போனால், தன் கதை அவ்வளவுதான் என்பது அவளுக்குப் புரியாமலா இருந்திருக்கும். புரிந்தே இருக்கும். ஆனாலும், அதைத் தாண்டி **அவர் இவருடைய குஷ்டரோகத்தை நீக்கி விடுவார்** என்று சொல்லியுள்ளாளே!

அவளுடைய உறுதிமிகு வார்த்தைகள் யாருடைய வார்த்தைகளை நம் நினைவுக்குக் கொண்டு வருகிறது? நம்மைக் கட்டுப்படுத்தும் புதிய ஏற்பாட்டில், பவுலடியார் **நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று நான் அறிவேன்** (2 தீமோ. 1:12) என்ற முழக்கமிட்டது நம் நினைவுக்கு வருகிறது தானே!. நம் பவுலடியார் இயேசுவால் சந்திக்கப்பட்டு, ஊழியத்தினிமித்தம் பல சவாலான அனுபவங்களைப் பெற்று, கிட்டத்தட்ட தன் இறுதி நாட்களில் உறுதியோடு சொல்ல முடிந்ததை, இவள் தன் இளம் பிராயத்தில் எவ்வித சந்தேகம் இல்லாமல் நீக்கிவிடுவார் என்று உறுதிபடச் சொல்லியுள்ளாளே! வியப்பாக இல்லையா?

அப்படியானால், அருமையானவர்களே கிறிஸ்துவின் மேலும், அவருடைய உபதேசங்கள் மீதுமான நம்முடைய நம்பிக்கையும், அந்த நம்பிக்கையில் நாம் காட்டும் உறுதிப்பாடும் எந்நிலையில் உள்ளது? குறிப்பாக, கிறிஸ்துவின் நற்செய்தி சம்பந்தமான காரியங்களில் நம் நம்பிக்கை எப்படியுள்ளது? பவுலடியார் ரோமாபுரி சபையாருக்கு எழுதும்போது, கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக்

குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது'' என்று (ரோமர் 1:16) எழுதி யுள்ளாரே. இச்சிறுமி போல் நாம் நம்ப வேண்டியவைகளை நம்ப வேண்டிய அளவுக்கு நம்பினால்தான் கிறிஸ்துவின் சுவிசேஷ த்தைக் குறித்து நாம் வெட்கப்படாதவர்களாயிருந்து, **இரட்சிப்புக்கு அது தேவபெலன்** என்று எடுத்துக் கூற முடியும். நம்பிக்கையில் தொய்வும், தளர்வும் இருக்குமானால், உறுதிப்பாட்டுக்கு வேலையே இல்லை.

இஸ்ரவேலின் **ராஜாவுக்கு** தன் தேசத்தில் ஒரு தீர்க்கதரிசி இருக்கிறார் என்பதும், அந்த தீர்க்கதரிசியினாலே அற்புதங்களை நிச்சயமாகச் செய்ய முடியும் என்பதும் தெரியவில்லை. என்ன காரணம்? தன் தேவனைப் பற்றிய அறிவும், புரிதலும் இல்லை. தேவன் மீது நம்பிக்கையே இல்லாதபோது தேவனால் என்ன ஆகும் என்பது பற்றிய உறுதியும், வைராக்கியம் எங்கிருந்து வரும்? ஒரு கணம் அந்த அடிமைச் சிறுமியை எண்ணிப் பாருங்கள். தேவன் மீதான அவளுடைய அபார நம்பிக்கையையும், அந்த நம்பிக்கையில் அவள் காட்டின உறுதியையும் கவனியுங்கள். ஆம், குஷ்டரோகத்தை **நீக்கி விடுவார்** என்பதில் எவ்வித சந்தேகம் அவளுக்கு இருக்கவில்லை. சிலுவைக்குப் பின்னால் வாழும் நாம் இவளைக் காட்டிலும் கூடுதல் நம்பிக்கையும், உறுதியும் உள்ள வர்களாக இருக்க வேண்டும். ஏனெனில், அவளுக்குக் கிறிஸ்துவும் அவருடைய காரியங்களும் தெரியாது, நமக்கோ எல்லாம் தெரியும்.

### III. அடிமைச் சிறுமி பிறரை நம்ப வைக்கும் திறன் கொண்டிருந்தாள்

நாகமான் குணமாக்கப்பட்ட சம்பவத்தில் இடம்பெற்றுள்ள அடிமைச் சிறுமியிடமிருந்து நமக்குக் கிடைக்கும் மற்றுமொரு பாடம், பிறரை நம்ப வைக்கும் திறன் பெற்றிருந்தாள் என்பது.

இந்த அடிமைச் சிறுமியிடம் இரக்க குணம், நம்பிக்கையில் உறுதிப்பாடு மட்டுமல்லாமல் தன் நம்பிக்கையைப் பிறர் ஏற்றுக் கொள்ளச் செய்யும்படியான ஆற்றலும் இருந்தது. இவளை நினைத்தால் ஆச்சரியமாக மட்டுமல்ல, ஒரு வகையில் வெட்க மாகவும் உள்ளது. 2 ராஜா. 5:4 –ஐ கவனியுங்கள், அப்பொழுது அவன் (நாகமான்) போய், இஸ்ரவேல் தேசத்துப் பெண் இன்ன இன்ன பிரகாரமாய்ச் சொல்லுகிறாள் என்று தன் ஆண்ட வனிடத்தில் அறிவித்தான். 3 –ம் வசனத்துக்கும், 4 – வசனத்துக்கும் இடைப்பட்ட நாட்கள் எவ்வளவு என்று தெரியாது. கண்டிப்பாகக் குறிப்பிட்ட கால இடைவெளி இருந்திருக்க வேண்டும். ஏனென்றால், பொதுவாக வீட்டில் பணிபுரியும் வயதில் மூத்த வர்களின் வார்த்தைக்கே வீட்டு சொந்தக்காரர்கள் செவி மடுக்க மாட்டார்கள். அட, அவனுக்கென்ன தெரியும், அவளுக் கென்ன

தெரியும் என்றே எண்ணுவார்கள். இந்தக் காலத்து நிலையே இப்படி என்றால், அந்த நாட்களில் கேட்கவா வேணும். அவள் இஸ்ரவேலிலுள்ள தீர்க்கதரிசி பற்றியும், அங்கே போனால் சுகம் நிச்சயம் என்று அறிவித்தபோது, எத்தனை கேள்விக் கணைகளை அவள் எதிர்கொள்ள வேண்டியிருந்திருக்கும்!

ஆயினும், அந்த இளம் பிராயத்தில் அத்தனைக்கும் அவள் சளைக்காமல் பதில் சொன்ன பிறகே, நாகமான் ஒரு முடிவுக்கு வந்திருப்பான். நாகமானுக்கு இஸ்ரவேலின் தேவனிலும், அவருடைய தீர்க்கதரிசியின் பேரிலும் எவ்வித நம்பிக்கையும் இருக்கவில்லை. அப்படி இருந்திருந்தால் யோர்தானில் போய் ஏழுதரம் முழுகு என்ற போது கோபித்து திரும்பிப் போக முற்பட்டிருப்பானா? அப்படிப்பட்ட நாகமானையே இச்சிறுமி தான் சொல்வதை ஏற்றுக்கொள்ளும்படி செய்துள்ளாள்!

தான் நம்புவதைப் பிறரையும் நம்ப வைப்பதில் இச்சிறுமி பவுலடியார் போன்ற மிகத் தேர்ந்த தேவ மனிதர்களைக் கூட மிஞ்சி விட்டாளோ? ஆம், தான் ஒரு விசாரணைக் கைதியாக ஆளுநர் பேலிக்ஸ் முன்பாக நின்று, தன் நம்பிக்கை குறித்து பல காரியங்களைப் படம் போட்டுக் காட்டிய பிறகும், இப்பொழுது நீ போகலாம், எனக்குச் சமயமானபோது உன்னை அழைப்பிப்பேன் [அப். 24:25] என்று சொல்லி பவுலை அனுப்பிவிட்டான். இதே அனுபவம் தான் அகிரிப்பா ராஜா காரியத்திலும் [ அப். 25:27,28] பவுலுக்குக் கிடைத்தது.

சரி, அருமையானவர்களே! இக்காரியத்தில் நாமெல்லாரும் எப்படி? இந்த அடிமைச் சிறுமி நமக்கு கற்றுக் கொடுக்கும் பாடத்தைக் கவனித்து, எஞ்சியுள்ள காலங்களிலாகிலும் தேவனுக்காகவும், அவருடைய சத்திய வார்த்தைகளுக்காகவும், கிறிஸ்துவுக்காகவும், கிறிஸ்துவின் உபதேசங்களுக்காகவும், கிறிஸ்து கட்டின சபைக்காகவும் நம்முடைய நம்பிக்கையையும், பக்தி வாழ்வையும் முன்மாதிரியாக வைத்து, சுற்றிலுமிருப்பவர்களின் பார்வையை நம் பக்கமாகத் திருப்பி, திறக்க வேண்டிய நேரத்தில் நம் வாயை கர்த்தருக்காக விரிவாய்த் திறந்து, சொல்ல வேண்டியவைகளைப் பிறர் ஏற்றுக் கொள்ளும்படியான அளவில் உரக்கவும், உறுதியாகவும் சொல்லிப் பாவ வியாதியில் சீரழிவோர் ஆவிக்குரிய சுகம் பெற்றுக்கொள்ள காரணமாயிருப்போம், ஓர் அடிமைச் சிறுமி தனக்குக் கிடைத்த கொஞ்ச போதனையில், எக்கச்சக்க சூழலுக்கு மத்தியில் இவ்வளவு பெரிய வேலையைச் செய்ய முடியுமானால், கிறிஸ்துவின் மூலமாகவும், அவருடைய தியாக மரணத்தின் மூலமாகவும் ஏராளமான ஆவிக்குரிய நன்மைகளையும், ஆசீர்வாதங்களையும் பெற்றிருக்கும் நாம், கிறிஸ்துவுக்காக எதுவும் செய்யாமல் வாய் மூடி மௌனிகளாக இருக்கலாமா? சிந்தித்துச் செயல்படுவோம் ! ஆமென்!!

# நரகம் பற்றி வேதாகமம் பேசுகிறது

J.C. சோட்

நரகம் என்றால் என்ன இக்கேள்வியும், அதற்கான பதிலும் ஒவ்வொருவருக்கும் சுவாரசியமாக இருக்கும். நான் இப்படிச் சொல்வது காரணத்தோடு தான். நரகம் எப்படிப்பட்டதென்றும், அங்கே செல்வதைத் தவிர்க்க எல்லாவித முயற்சியும் எடுக்க வேண்டுமென்பதை அறியாதபட்சத்தில், பிசாசினுடைய நரகத்தில் நம்முடைய நித்தியத்தைக் கழிக்க நேரிடும்.

அநேகர் நரகம் என்பது ஒரு புராணக்கதை சார்ந்த இடம் என்று எண்ணுகின்றனர். வேறுசிலர், அது பயத்தை ஏற்படுத்தும் என்பதால், நரகம் பற்றித் தெரிந்து கொள்ளவே விரும்புவதில்லை. இன்னும், தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களில் சிலர் கூட, நரக அக்கினி மற்றும் ஆக்கினைத் தீர்ப்பு பற்றி பேசும் பிரசங்கியார்களைக் குற்றம் சாட்டுகின்றனர். ஏனெனில், அப்படிப்பட்ட வேதனை மிகுந்த இடத்திற்கு ஒருவன் அனுப்பப்படுவான் என்பது தேவனை அந்தியுள்ளவராகக் காட்டிவிடும் என்று.

மத உலகில், தீமை செய்தவர்கள் நிர்மூலமாக்கப்படும் அல்லது அழிக்கப்படும் ஓர் இடம் என்று நரகத்திற்கு விளக்கம் கொடுக்கின்றனர். அதாவது நரகம் போனவுடன் அவர்கள் ஆத்துமாக்கள் அழிக்கப்படும், அதன் மூலம் அவர்கள் இல்லாமற் போவார்கள் என்று. ஆனால், இக்கூற்று உண்மையல்ல என்று நாம் பார்க்கப் போகிறோம்.

வேதவசனங்களின் படி நரகம் என்பது பிசாசுக்காகவும், அவன் தூதர்களுக்காகவும் உண்டாக்கப்பட்ட ஓர் இடம் என்றும், அதே வேளையில், துன்மார்க்கருக்கும், தேவனற்றவர்களுக்கும் அவர்களுடைய மரணத்திற்குப் பிறகு நித்திய தண்டனையைக் கொடுக்கும் இடமாக இருக்கிறதென்றும் பார்க்க முடியும். இது என்றென்றும் நீடிக்கும் தாங்க முடியாத தண்டனைக்கான அக்கினிக் கடல் என்று விவரிக்கப்பட்டுள்ளது.

**நரகம் என்பது ஒரு நிஜமான இடம்**

நரகம் என்பது ஓர் நிஜமான இடம் என்று வேதவசனங்களில் பேசப்பட்டுள்ளது. கிறிஸ்து ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள் (மத்.10:28) என்று சொல்லியுள்ளார். தன்னைத் தள்ளிய ஒரு பட்டணத்தை குறித்து, கிறிஸ்துவானவர், வானபரியாந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே நீ பாதாள பரியாந்தம் தாழ்த்தப்படுவாய் என்று கூறியுள்ளார்

(லூக்கா 10:15). பக்தியாகவும் , அதே நேரத்தில் தவறாகவும் இருந்தவர்களை இயேசு கண்டித்து, இப்படிச் சொன்னார், இந்த ஜனங்கள் கண்களினால் காணாமலும், காதுகளினாலும் கேளாம லும், இருதயத்தினால் உணர்ந்து மனந்திரும்பாமலும், நான் அவர் களை ஆரோக்கியமாக்காமலும் இருக்கும்படியாக அவர்கள் இருத யம் கொழுத்திருக்கிறது. காதால் மந்தமாய்க் கேட்டு தங்கள் கண் களை மூடிக்கொண்டார்கள் என்று (மத். 13:15). அதாவது, அந்த மாய்மாலமான மதத்தலைவர்கள் தவறான உபதேசங்களை போ தித்தார்கள். அப்போஸ்தலர்கள் முடிவிலே அவர்களை நரகத்திலே கொண்டு போய்த் தள்ளத்தக்கதாக இருந்தாலும், ஒரு முறை ஜனங்கள் அதை ஏற்றுக் கொண்டுவிட்டால், மறுபடியும் அவர் களைச் சத்தியத்தில் நடத்துவதென்பது மிகவும் கடினமான ஒன்று.

அதே சுவிசேஷ புத்தகத்தில், இயேசு மேலுமாக இவ்விதம் கூறினார். மாயக்காரராகிய வேதபாரகரே, பரிசேயரே உங்களுக்கு ஐயோ, நீங்கள் ஒற்தலாமிலும் வெந்தயத்திலும் சீரகத்திலும் தசமபா கம் செலுத்தி, நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்த வைகளாகிய நீதியையும் இரக்கத்தையும் விட்டுவிட்டீர்கள், இவைகளையும் செய்ய வேண்டும், அவைகளையும் விடாதிருக்க வேண்டும் (மத்.23:23). சில சந்தர்ப்பங்களில் நரகம் என்ற வார்த்தை மரணத்தைக் குறிப்பதாக மொழி பெயர்க்கப்பட்டிருப்பது உண்மை யே தாம் வாக்குத்தத்தம் செய்யும் சபையைக் கட்டுவது பாதாளத் தின் வாசல் – நரகம் – மேற்கொள்ளவில்லையென்று சொல்லப் பட்டுள்ளது (மத். 16:18). ஆனால், நாம் மேற்கோள் காட்டிய வச னங்களில் உள்ள நரகம் என்னும் வார்த்தை நித்திய ஆக்கினைக் கான ஓர் இடத்தையே குறிக்கிறது. இது சம்பந்தமாக சொல்லர்த்த ரீதியிலான ஒரு நரகம் என்ற இடத்தையே குறிக்கிறது. அந்த இடத் தில் தான் துன்மார்க்கர் நித்திய ஆக்கினையை அடைவார்கள்.

நியாயத்தீர்ப்பின் நாளில், துன்மார்க்கர் அடையப்போகும் தண் டனை குறித்து கிறிஸ்து விவரமாகப் பேசியுள்ளார். அப்பொழுது இடது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர்: சபிக்கப்பட்டவர்க ளே என்னைவிட்டு பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள் ( மத். 25:41). இந்த வேதபகுதி நீதிமான்களுக்கான பரலோகம் எப்ப டி உண்மையான, என்றென்றைக்குமான ஓர் இடமோ, அது போல், நரகமும் நிஜமான நித்தியான இடம் என்று தெளிவுபடுத்து கிறது. நரகத்திலே உடனடியாக அழிக்கப்படுவார்கள் என்ற பொய் போதனை துன்மார்க்கர்களுக்கு எவ்வளவு ஆறுதலைக் கொடுக் கக் கூடியதாக இருந்தாலும், வேத வசங்கள் இப்போதனைக்குத் துணை நிற்பதில்லை.

**நரகம் எதைப் போன்று இருக்கும்?**

நரகம் என்பது, துன்மார்க்கர் என்றென்றும், நித்திய காலத்திற் கும் தண்டனை பெறும் ஓர் இடம். ஐஐ தெச.1:7–9 வசனங்களில் பவுல்

தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத் திற்குக் கீழ்ப்படியாதவர்களுக் கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜூவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும் போது அப்படியா கும். அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக் கவராயும், நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவாசித்தபடியி னாலே உங்களிடத்திலும், விசுவாசிக்கிறவர்களெல்லாரிடத்திலும் ஆச்சரியப்படத்தக்கவராயும், அவர் வரும் போது என்று கூறுகிறார். நரகம் இரண்டாம் மரணம் என்றழைக்கப்படுகிறது. அதன் பொருள், தேவனிடமிருந்து நித்திய காலத்திற்கும் பிரிக்கப்படக் கூடிய ஓர் இடம். அக்கினியும், கந்தகமும் எரிகின்ற கடல் என்று சொல்லப் பட்டுள்ளது (வெளி.21:8). அதுமாத்திரமல்ல, அழுகையும், பற்கடிப் பும் உள்ள ஓர் இடம் என்றும் விவரிக்கப்பட்டுள்ளது ( மத்.25:30).

**யார் நரகத்திற்கு அனுப்பப்படுவார்கள்?**

நரகத்திற்குப் போவார் பற்றி யோவான் இவ்விதம் எழுதியுள்ளார் பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்க ளும், கொலைபாதகரும், விபச்சாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மர ணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார் கள் என்றார். இன்னும் என்னுடனே பேசினவன் நரகத்தையும் அதின் வாசல்களையும் அதின் மதிலையும் அளக்கிறதற்கு ஒரு பொற்கோலைப் பிடித்திருந்தான் ( வெளி. 21: 8,15).

இவர்களைப் போன்று நரகத்திற்கு அனுப்பப்படுவோர் பட்டியல் நீண்டதாக உள்ளது. மாம்சக் கிரியைக்காரர்கள், பாவிகள், தேவ னற்றவர்கள், தேவனையும் கிறிஸ்துவையும் விசுவாசிக்காதவர் கள், தங்கள் நீதியின் கிரியை மூலம் இரட்சிப்படைய விரும்புவார் கள், மாய்மாலக்காரர்கள், பக்தி வேஷம் தரித்துத் தவறு செய்பவர் கள் என்று இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். இவர்க ளெல்லாம் இழந்து போனவர்கள். அவருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியாமல் போனபடியால், தேவனைச் சந்திக்க ஆயத்தமாகாத வர்கள்.

**நீங்கள் நரகம் செல்ல விரும்புகிறீர்களா?**

நீங்கள் ஒரு வேளை கிறிஸ்தவராக – ஓர் உண்மையுள்ள கிறிஸ்தவராக இல்லையானால், நீங்கள் நித்தியத்தை நரகத்திலே கழிக்க விரும்பாதவராயிருந்தால், உங்கள் பாவங்களிலிருந்து

மனந்திரும்பி தேவனுக்குக் கீழ்படிய வேண்டும். நீங்கள் இழந்து போன நிலையில் மரிக்க வேண்டிய அவசியமில்லை. நிச்சயமான நரகாக்கினையிலிருந்து தப்பிக்க வேண்டுமானால், தேவனில் விசுவாசம் வைத்து பாவங்களிலிருந்து மனந்திரும்பி இயேசுவை தேவனுடைய குமாரனென்று அறிக்கை செய்து பாவமன்னிப்புக் கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும் (மாற்கு 16:16; அப். 2:38). இப்படி நீங்கள் செய்யும் போது கர்த்தர் உங்களை இரட்சித்து, அவருடைய சபையில் சேர்த்துக் கொள்வார். அதன் பிறகு, ஓர் உண்மையுள்ள –

கிறிஸ்தவராக கர்த்தருடைய ஆவிக்குரிய குடும்பத்தின் அங்கமாக – நீங்கள் ஆசீர்திக்கப்பட்டவர்களாய், பாதுகாக்கப்பட்டு வாழ்வீர்கள் – பிறகு, ஒரு நாளில் தேவாதி தேவனோடு என்றென்றும் அவருடன் இருக்கும் படியாய் வாழ்வீர்கள்.

**முடிவுரை**

காலமும், சமயமும் இருக்கும் போதே இந்த வாய்ப்புகளைப் படிக்கிற ஒவ்வொருவரும் கீழ்ப்படியும்படியாய் நான் ஜெபிக்கிறேன். கர்த்தரின் வார்த்தை சொல்லுவதை நினைத்துக் கொள்ளுங்கள். எபி.2:1–4–ம் வசனங்களில், ஆகையால், நாம் கேட்டவைகளை விட்டு விலகாதபடிக்கு அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாய்க் கவனிக்க வேண்டும். ஏனெனில், தேவதூதர் மூலமாய்ச் சொல்லப்பட்ட வசனத்திற்கு விரோதமான எந்தச் செய்கைக்கும் கீழ்ப்படியாமைக்கும் நீதியான தண்டனை வரத்தக்கதாக அவர்களுடைய வசனம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க, முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும், அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும் பல விதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின் படி பகிர்ந்து கொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்ளுவோம்? ✝

---

## சபை / ஜாதி அடிப்படையில் பிரிக்கப்படுகிறோமா?

கிரேக்கனென்றும், யூதனென்றுமில்லை. விருத்தசேதனமுள்ளவன் என்றும், விருத்தசேதனமில்லாதவனென்றுமில்லை, புறஜாதியானென்றும், புறதேசத்தானென்றுமில்லை. அடிமையென்றும், சுயாதீனனென்றுமில்லை: கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாமுமாயிருக்கிறார். (கொலோ 3:11)

# இயேசு எவ்வாறு இந்த உலகத்தை மாற்றினார்

பெண்கள் பகுதி

Sis. ரேச்சல் ராஜநாயகம்

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே! உங்கள் அனைவருக்கும் வாழ்த்துதல்களை தெரிவித்துக் கொள்கிறேன். வேதாகமத்தில் இரண்டு ஏற்பாடுகள் அதாவது பிரிவுகள் இருக்கிறது என்பதை நாம் அனைவரும் அறிவோம். பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்று இரு பிரிவுகள் உள்ளன. பழைய ஏற்பாடு சிருஷ்டிப்பு துவங்கி, ஜலப்பிரளயம், முற்பிதாக்கள் காலம், அடிமைத்தனம், விடுதலை, வனாந்திர யாத்திரை, கானான் தேசம், நியாயாதிபதிகள், இராஜாக்கள் என்று பல கால கட்டங்களை உள்ளடக்கியிருந்தது. எப்படிப் போட்டாலும் மக்கள் தேவன் கொடுத்த நியாயப் பிரமாணத்துக்கு கீழ்ப்படியாமல் அந்நிய தேவர்களை ஏராளமாய் ஏற்படுத்தி ஒரே தேவனாகிய யெகோவாவை விட்டு விலகி தேவ கோபத்திற்கு ஆளானார்கள். தீர்க்கதரிசிகளை கொண்டு தேவன் எச்சரிப்பு கொடுத்தார். மல்கியா காலத்திற்குப் பிறகு சுமார் 400 ஆண்டு காலம் அமைதலாயிருந்தது. தேவன் அமைதலாய் இருந்து மக்களோடு எந்த தொடர்பும் கொள்ளாமல் இருந்தார். ‘காலம் நிறைவேறின போது, ஸ்தீரியினிடத்தில் பிறந்தவரும் நியாயப் பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார்‘ (கலா. 4:5).

நாம் அனைவரும் அறிந்தபடி இயேசு யூதேயாவிலுள்ள பெத்லகேமில் பிறந்தார். 30 ஆண்டுகள் கழித்து தன் ஊழியத்தை ஆரம்பித்தார். அவர் தம்முடைய ஊழியத்தை ஆரம்பித்த காலத்தில் குருடர், செவிடர், சப்பாணிகள், பிச்சையெடுத்து வாழ்ந்த மக்கள் போன்றவர்களை அடிக்கடி சந்தித்தார். அவர்களுக்கு சுகம் கொடுத்தார். பிசாசின் பிடியில் சிக்கி இருந்தவர்களை விடுதலை யாக்கினார். யாவராலும் வெறுக்கப்பட்ட குஷ்டரோகிகளை தொட்டு குணப்படுத்தினார். அவர் ஆயக்காரரோடும், பாவி களோடும் போஜனம் பண்ணுகிறதை வேதபாதகரும், பரிசேயரும் கண்டு அவருடைய சீஷரை நோக்கி; அவர் ஆயக்காரரோடும், பாவிகளோடும் போஜன பானம் பண்ணுகிறதென்னவென்று கேட்டார்கள்(மாற்கு 2:16).

இயேசு ஸ்திரீகளை தன்னோடு கூட ஊழியத்தில் பொருளாதார உதவி செய்யவும், பங்கேற்கவும் அனுமதித்தார் (லூக்கா 8:1-3). அவர்களை ஒதுக்கி வைக்காமல், மார்த்தாள், மரியாள் போன்றவர் களின் வீடுகளுக்குச் சென்று தன் பாதத்தருகே அமர்ந்து தன்னிடமிருந்து கற்றுக் கொள்ள வைத்தார் (லூக்கா 10:38-42).

நாம் நன்றாக சிந்தித்துப் பார்த்தால் இயேசுவுடைய அன்பு, இரக்கம், கருணை, மன்னிக்கும் தன்மையை காணமுடியும். இயேசு வந்தபோது, அன்றைக்கிருந்த உலகத்திற்கு மிகவும் தேவையாக இருந்த ஒன்றே. அது, பிதாவை அப்படியே இவர் வெளிப்படுத்த வேண்டியதாய் இருந்தது. இதற்கு முன்புயாரும் இதுவரை செய்திராத, ஏதேன் தோட்டத்திலிருந்து, நியாயப் பிரமாண காலத்திலும் எந்த சட்டத்தையும் ஏற்றுக் கொள்ளாத புறஜாதிகளின் காலத்திலும், தேவனை போல் வாழ்ந்து காட்டினவர் இயேசுவைத் தவிர வேறு யாரும் இல்லை. இயேசு தன்னையே பலியாக கொடுத்து உலகத்தை மாற்றினார். பாவத்திலிருந்து மீட்பு பெற ஒரு வழியை உண்டாக்கினார் தேவனுக்கும், மனிதனுக்கும் இருந்த அந்த மாபெரும் பிரிவு சுவற்றை உடைத்தார். ஆதாமும், ஏவாளும் தேவ கட்டளையை மீறி அதனால் ஏற்படுத்திய சுவற்றை உடைத்தார். நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார் (2 கொரி. 5:21).

**'இயேசுவும் அவருடைய சபையும்'**

மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய நான்கு சுவிசேஷ புத்தகங்களும் இயேசுவின் வாழ்க்கை, ஊழியம், மரணம், உயிர்த்தெழுதல் ஆகியவைகளை விவரிக்கிறது. இயேசுவின் தெய்வீகத்தையும் அவருடைய போதனைகளின் உச்சத்தையும் ஒரே செய்தியில் சொல்ல வேண்டுமானால் (மத். 16:16–18) பேதுருவின் அறிக்கையான **நீர் ஜீவனுள்ள தேவனுடையகுமாரனாகிய கிறிஸ்து** என்ற வார்த்தைக்கு, இந்தக் கல்லின் மேல் என் சபையை கட்டுவேன் என்ற இயேசுவின் பதில்.

இயேசு இதை சொன்ன பின்பு இதை ஒருவருக்கும் சொல்ல வேண்டாம் என்று கட்டளையிட்டார். சபை இன்னும் எதிர்காலத்தில் தான் இருந்தது. சபை ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்பு இயேசு இன்னும் செய்ய வேண்டிய வேலைகள் இருந்தன. சுகப்படுத்துவது, உபதேசிப்பது, பாடுகள் படுவது, மரிப்பது, உயிர்த்தெழுவது என்று செய்யப்பட வேண்டியவைகள் இயேசுவுக்கு இருந்தது (மத். 16:21). பேதுரு இயேசுவிடம் இது உமக்கு சம்பவிக்க கூடாது என்றான்.

**சபை** என்பது ஒரு **கூட்டம்.** ஒரு நோக்கத்திற்காக அழைக்கப் பட்ட மக்கள். ஒரு பொதுவான வார்த்தை ஒரு கூட்ட ஜனம் ஒன்றாகக் கூடி ஒரு சொற்பொழிவை கேட்பது. ஆனால், அப்போது சீஷர்களுக்கு இதைப் பற்றியதான விளக்கம் புரியவில்லை. இப்படி ஒரு கூட்டம் மக்கள் உலகத்தை மாற்றுவார்களா? அந்த சபையில் தங்களுக்கும் பங்கு இருக்கிறது, நற்செய்தியைப் பரப்பும் வேலை இவர்கள் கையிலும் இருக்கிறதென்பதை உணர அவர்களால் இயலவில்லை. அப்போது அவர்களுக்கு அது முடியாத ஒன்றுதான்.

## எதிர்பார்த்தலும், நிறைவேறுதலும்

இயேசு தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்தில், தன் வழக்கத்தின் படியே ஓய்வு நாளில் ஜெப ஆலயத்தில் பிரவேசித்து ஏசாயா தீர்க்க தரிசியின் புத்தகம் அவர் கையில் கொடுக்கப்பட்டபோது எழுந்து நின்று, 'கர்த்தருடைய ஆவியானவர் என் மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார். இருதயம் நறுங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும், பிரசித்தப்படுத்தவும், நொறுங் குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார் என்று' வாசித்தார் (லூக்கா 4:18,19).

மேலும் 21-ம் வசனத்தில், 'உங்கள் காதுகள் கேட்க இந்த வேத வாக்கியம் இன்றைய தினம் நிறைவேறிற்று என்றார்.

பழைய ஏற்பாட்டில் பல காலமாக அனுஷ்டித்த மிருக பலிகளை மாற்றினார். தன்னுடைய மரணத்தின் மூலம் பாவத்திற்காக மனஸ்தாபப்படுகிறவர்களுக்கு மீட்பைக் கொடுக்கிறார். இயேசு சிலுவையில் மரித்த போது தேவாலயத்தின் திரைச்சீலை மேல் தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது (மத்தேயு 27:51). பழைய ஏற்பாட்டின் தொழுகை முறையை முடித்து, நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாக யாரெல்லாம் கீழ்ப்படிகிறார்களோ, அவர்களெல்லாம் தேவனண்டை சேர வழிமுறைகளை ஏற்படுத்தினார்.

எப்படியாக பிரமாணத்தை மீறாமல் கைக்கொண்டு, வியக்க வைக்கும் மாற்றத்தை இயேசு கொண்டு வந்திருக்கிறார்! விக்கிரக வழிபாட்டிலிருந்து ஒரு வியக்க வைக்கும் விடுதலை! இயேசு மரித்து தம் சுய ரத்தத்தால் சம்பாதித்த சபை அன்பு, விசுவாசத்துடன் கூடிய கீழ்ப்படிதலை அஸ்திபாரமாக கொண்டுள்ளது. எருசலேமில் ஸ்தாபிக்கப்பட்டது. பல பாடுகள் மத்தியிலும் பூத்துக் குலுங்கி பரந்து விரிந்தது. உலகத்தையே **உன்னை போல் பிறனையும் நேசி** என்று சொல்லி மாற்றியது.

கிறிஸ்துவின் சபையைப் போல் உலகம் எதையும், எங்கேயும், பார்த்திருக்க முடியாது. அப். 2ம் அதிகாரத்தின் பிரசங்கத்தில் ஏராளமான மக்கள் கீழ்ப்படிந்தார்கள் (கலாத்தியர் 3:28) -ல் யூதனென்றும், கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும், சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும், பெண்ணென்று மில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள்

ஒன்றாயிருக்கிறீர்கள்' என்று அழகான வசனத்தை பார்க்கிறோம். அப்போஸ்தலர் நடபடிகளில் தான் இந்த சமத்துவம் ஆரம்பமானது. இந்த ஆச்சரியமான சுதந்திரம் கிறிஸ்துவுக்குள் மட்டும் தான் நமக்கு கிடைத்தது. அப்புத்தகத்தில் பவுல், சீலா போன்றவர்கள் உலகையே தலைகீழாக மாற்றிப் போட்டார்கள்(அப். 17:6). நிறைய பெண்களும் ஊழியத்தில் பங்காற்றினார்கள்.

அருமையானவர்களே! இவ்விதமாக நம் இயேசு உலகத்தை மாற்றிப் போட்டார். இதை நாம் ஏற்றுக்கொள்வோமா? விசுவாசிப் போமா? வாசிக்கும் சகோதரிகள் யாவும் சிந்தித்து, கேள்வி கேட்டு, நம் பங்குக்கு என்ன செய்ய கடமைப்பட்டுள்ளோமோ அதை செய்வோம். ஆமென்!!!

✝

## ஒரே இயேசுகிறிஸ்துவை பின்பற்றும் நமக்குள் ஏன் "பிரிவினைகள்"

**1. பிரதான கற்பனையான அன்பு – நம்மில் இல்லை**

நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது. (யோவா 15:12)

**2. பெருமை ஆளுகிறது – தாழ்மை இல்லை**

உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாக இருக்கக்கடவன்.( மாற்கு 10:43)

**3. பிசாசின் போதனைகளால் பிரிக்கப்படுகிறோம்**

அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள்: அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞரென்று உங்களுக்கு அநேகந்தரம் சொன்னேன். இப்பொழுது கண்ணீரோடும் சொல்லுகிறேன் (பிலி 3:18) வாசி 1 திமோ 4:1, கலா 5:8

வாலிபர் பகுதி

# பாரம்பரியங்களின் ஆபத்து

**Dr. ஏபில் நாயகம்**

கிறிஸ்துவின் போதனைகளையும், தேவ ஆவியினாலேயே கொடுக்கப்டபட்ட அப்போஸ்தலரின் உபதேசத்தையும் மையமாக கொண்டிருப்பது தான் கிறிஸ்தவம். கிறிஸ்தவன் என்று தன்னை அடையாளப்படுத்திக் கொள்கிற எந்த ஒரு நபரும் அதையே தன் பக்தி வாழ்வின் மையமாக கொண்டிருக்க வேண்டும்.

ஆனால், நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற உலகின் சூழ்நிலை என்ன? கிறிஸ்தவன் என்று தங்களை அடையாளப்படுத்திக் கொள்ளுகிறவர்கள் கிறிஸ்துவின் போதனை மற்றும் அப்போஸ்தலர்கள் மூலம் கொடுக்கப்பட்ட உபதேசத்திற்கும், மனிதனுடைய போதனைக்கும் வித்தியாசம் தெரியாமல் திண்டா டுகின்றனர். அதன் விளைவு, சிலர் மனித போதனைகளையே மெய் போதனைகளாக ஏறிறுக் கொண்டு, அதை மையப்படுத்தி தங்கள் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படி செய்கிறவர்கள் எப்படித் தங்களை கிறிஸ்துவர்கள் என்று அடையாளப்படுத்திக் கொள்ள முடியும்? அப்படி செய்பவர்களை ஏன் இப்படி என்று கேட்டால் அவர்கள் சொல்கிற பதில், இது பாரம்பரியமாக எங்கள் முன்னோர்கள் காலத்திலிருந்து ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகிறது, அதை நாங்களும் அப்படியே செய்கி றோம் என்று சொல்கிறார்கள். பலர் மெய் சத்தியத்தை முழுமையாக தெரிந்து கொள்வதற்கு இம்மனப்போக்கு தடையா யிருக்கிறது. இதன் மூலம் கிறிஸ்தவன் என்ற அடையாளத்தை பலர் தொலைத்து விட்டார்கள். கொடுமையாதெனில், அதை உணராமல் இருக்கிறார்கள். மனிதனுடைய போதனைகள் பல இன்று இருந்தாலும், குறிப்பாக இந்த மாதத்தில் லெந்து நாட்கள் புனிதவெள்ளி, ஈஸ்டர் போன்ற சிறப்பு நாட்களை கிறிஸ்தவன் அநுசரிக்க வேண்டும் என்பது எழுதாத விதியாகிவிட்டது. ஆநுசரித்தால் நல்ல கிறிஸ்தவன், அப்படி அநுசரிக்காவிட்டால் பலர் புருவங்களை உயர்த்துவதற்கு நாம் காரணமாகிவிடுகிறோம். இது தான் இன்றைய கிறிஸ்தவத்தின் நிலை.

மத் 15:3,6 வசனங்களை நாம் வாசித்தால், நீங்கள் உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை ஏன் மீறி நடக்கிறீர்கள்? என்றும், உங்கள் பாரம்பரியத்தினாலே

தேவனுடைய கற்பனையை அவமாக்கி வருகிறீர்கள் என்றும் வாசிக்க முடியும். எந்த விதமான வசனங்களின் ஆதாரமும் இல்லாமல் செய்யப்படும் காரியங்களே காலப்போக்கில் பாரம்பரியங்களுக்கு வித்திட்டது. அப்படியென்றால், அவை மனிதனுடைய யோசனையின்படியும், பல கூட்ட மனிதர்களின் விருப்பத்திற்குகேற்பவும் வேத வசனத்தின் ஆதாரமில்லாமல் தோன்றியவையே ஆகும். தேவனுடைய கற்பனையை மீறி நடக்கிறோம் என்று மத் 15:3 ல் வாசிக்கிறோம். தேவனுடைய கற்பனையை மனிதனுடைய யோசனை களுக்காகவும், மனிதனுடைய விருப்பத்திற்காகவும் மீறுவதற்கு தைரியம் எப்படி வருகிறது? II யோவான் 1:9–ல் கிறிஸ்துவினுடைய உபதேசத்திலேயே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல என்று தெளிவாகவே கொடுக்கப் பட்டிருக்கிறது. பாரம்பரியங்களின் மூலம் உபதேசத்தை மீறுகிறவர்கள் தங்களைத் தேர்ந்த கிறிஸ்தவர்கள் என்று அடையாளப் படுத்திக் கொண்டாலும் அவர்கள் தேவனை உடையவர்கள் அல்ல. இந்த உண்மையை அறியா மலிருப்பதற்கான காரணம், மனிதனுடைய போதனையின் மீது இருக்கும் பற்றும், அதை விரும்பும் மனதும் தான். தேவனுடைய போதனை என்ன சொல்கிறது என்று கேட்பதற்குக் கூட இன்று பலருக்கு மனதில்லை. இப்படி செய்கிறவர்கள் தேவனுடைய கற்பனையை அவமாக்குகிறார்கள். இந்தப் போக்கு சரியா? சிந்தியுங்கள்.

மத் 15: 9, 10 வசனங்களை வாசியுங்கள். 10ம் வசனத்தை முதலில் வாசிப்போம். இங்கே இயேசு கிறிஸ்து ஜனங்களைப் பார்த்துக் கேட்டு, உணருங்கள் என்று அறிவுறுத்துகிறார். எல்லாவற்றையும் கேட்க வேண்டும். ஆங்கில வேதாகமத்திலே Hear and Understand என்று எழுதப்பட்டிருக்கிறது. அதன் பொருள் கேட்டு புரிந்து கொள்ள வேண்டும். கேட்கிற காரியங்களை, இது மனிதனுடைய போதனையா, தேவனுடைய போதனையா என்று புரிந்து கொள்ள வேண்டும். கேட்க மட்டும் செய்து அதை செயல்படுத்திக் விடக் கூடாது. அதை ஆராய்ந்து புரிந்து கொள்ள வேண்டும். சரி எது, தவறு எது என்பதைத் சீர் தூக்கிப் பார்த்து பின்னர் சரியானதை மட்டுமே செயல்படுத்த வேண்டும். இப்பொழுது 9ம் வசனத்தை வாசிப்போம். மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று வாசிக்கின்றோம். மனுஷருடைய கற்பனைகளை மையமாக வைத்து செயல்படுவோமாகில் நாம் தேவனுக்கென்று என

நினைத்துச் செய்யும் காரியங்கள் அனைத்துமே வீண் என்று இயேசு கிறிஸ்து சொல்லுகிறார். எனவே தான், சொல்லப்படுவதைக் கேட்டு அதன் பின்பு சரி எது, தவறு எது என்று புரிந்து கொள்வதே நற்செயலாகும். இதை இன்று எத்தனை பேர் செய்கிறார்கள்? பாரம்பரியங்களை ஆராய்ந்து பார்க்கவே தயங்குகிறார்கள். தேவனுடைய வார்த்தைக்கு கூட அவ்வளவு பயமும், பற்றுதலும் இருக்குமா என்று தெரியவில்லை. பாரம்பரியங்கள் மீது அப்படி ஒரு பற்று. இது சரியா?

நாம் பின்பற்றும் உபதேசத்தைப் பொறுத்தவரை பாரம் பரியங்களுக்கு நாம் இடம் கொடுக்கக் கூடாது. இன்று கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்கள் பாரம் பரியத்திற்கும், தேவனுடைய போதனைகளுக்கும் சமமான இடத்தை கொடுத்திருக்கிறார்கள். உண்மைக் கிறிஸ்தவன் அப்படி செய்வதில்லை. செய்யவும் கூடாது.

பிரியமான வாலிபரே! இந்த உண்மையை அறியாமலிருக்கிற பலரை நாம் சந்திக்க நேரிடும். அவர்களுக்கு இதைச் சொல்லி புரிய வைப்பது நம் கடமையாகும். அவர்கள் செய்யும் வீணாண ஆராதனையை தேவனுக்கேற்ற ஆராதனையாக மாற்ற நாம் உதவுவோம்.

தேவன் நம்மை ஆசீர்வதிப்பாராக. ஆமென்!!

✝

---

நமக்குத் தேவை!

- சிரிப்பு பிரசங்கமல்ல; சீர்படுத்தும் பிரசங்கமே.
- பயமுறுத்தும் பிரசங்கமல்ல; பயபக்தி உண்டாக்கும் பிரசங்கமே.
- வசீகரிக்கும் பிரசங்கமல்ல; வாழ்வை வளமாக்கும் பிரசங்கமே.
- அறிவில் உதிக்கும் பிரசங்கமல்ல; அனுபவத்தில் உருவாகும் பிரசங்கமே.
- ஆசீர்வாதமான பிரசங்கமல்ல; ஆரோக்கியமான பிரசங்கமே.

சிறுவர் பகுதி

# கனிக்கொடுங்கள்

Dr. பிரெய்ஸி

ஹெலோ குழந்தைகளே! நீங்கள் அனைவரும் நன்றாக இருப்பீர்கள் என்று நம்புகிறோம்.எங்கள் கட்டுரைகளை ஒவ்வொரு மாதம் படித்து வருகிறீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம். இம்மாதம் இயேசுவின் அற்புதங்களில் ஒன்றிலிருந்து சில விஷயங்களைக் கற்றுக்கொள்வோம்.

லூக்கா 13:6–9ல் கனி தராத அத்தி மரத்தின் உவமையைப் பற்றி நாம் அறிவோம். மூன்று வருடமாய் அந்த அத்திமரத்திலே கனியைக் காணவில்லை. அதனால் திராட்சைத் தோட்டத்தின் உரிமையாளர் அதை வெட்ட விரும்பினார். ஆகையால் அன்புள்ள குழந்தைகளே, தேவன் கொடுத்த திறமைகளை நாம் பயன்படுத்தாதபோது, நாம் தேவனால் நிராகரிக்கப்படுவோம். அவருடைய வேலையில் கனி கொடுக்க வேண்டும்.

அன்பான குழந்தைகளே, நாம் கிறிஸ்துவைப் பற்றிய அறிவில் வளர வேண்டும், தேவனுடைய பிள்ளைகளாக சபைக்கு உள்ளேயும்,வெளியேயும் நம் விளக்குகளைப் பிரகாசிக்க வேண்டும். கனி கொடுங்கள் பிள்ளைகளே !

With love
**Praisey Akka**

**வினாக்கள்:**

1 திராட்சைத் தோட்டக்காரர் எதற்காக மூன்று வருடங்கள் காத்திருந்தார்?

2 திராட்சைத் தோட்டத்தை பராமரித்துக் கொண்டிருந்தவன் அதன் உரிமையாளரிடம் என்ன சொன்னான்?

3 நாம் தேவனுடைய ராஜ்ஜியத்திலிருந்து துண்டிக்கப் படாதபடிக்கு என்ன செய்ய வேண்டும்?

# பகை உணர்வின் பக்க விளைவுகள்

## சகோ.பென்னி மார்ட்டின்

**பி**ரியமான திருமறை ஆசான் வாசகர்கள் யாவருக்கும் வானவராம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இன்று உலகம் முழுவதிலும் மனித இனம் பகை உணர்வினால் பிரிந்து கிடக்கிறது. உலக மக்கள் தொகையில் பாதி பிரிவினர் ஒரு துருவத்திலும், மீதி பிரிவினர் மத்தூர் துருவத்திலும் பிரிந்து கிடக்கின்றனர். மேலும், இன்றைய நாட்களில் செய்திகளை செவி கொடுத்து கேட்டாலும் சரி, அல்லது இணையத்தில் இணைந்து இன்றியமையான தகவல்களை சேகரித்தாலும் சரி. அகிலமெங்கும் அரங்கேறி வரும் அநியாயங்களுக்கெல்லாம் அடிப்படை காரணம் பகை உணர்வு தான். இந்தப் பாழாய் போன பகை உணர்வின் பக்க விளைவுகளை நாம் திரும்பிய பக்கம் எல்லாம் பார்க்க முடியும். வேதாகமத்தின் பரிசுத்த பக்கங்களில் பகை உணர்வு நம் தேவனால் எவ்வித பச்சபாதமின்றி பகைக்கப்படுகிறது. பழைய ஏற்பாடாக இருக்கட்டும் அல்லது புதிய ஏற்பாடாக இருக்கட்டும் இந்தப் பகை உணர்வு தேவனால் அறவே வெறுக்கப்படுவதால் நாம் இதிலிருந்து விலகி இருப்பது அவசியமாய் இருக்கிறது.. **உன் சகோதரனை உன் உள்ளத்தில் பகையாயாக** லேவியராககமம் 19:17; **உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்**( மத்தேயு5:44). மனித இனம் பகை உணர்வு இல்லாத ஒன்றாக இருந்தால் இவ்வுலகம் எவ்வளவு அழகான ஓரிடமாக இருக்கும் என்பதை சற்று கற்பனை செய்து பாருங்கள். இப்போது தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் இந்தப் பகை உணர்வை எப்படி மேற்கொள்ள முடியும் என்பதை வேதத்தின் வெளிச்சத்தில் காண்போம்.

### I பகை உணர்வின் தன்மை

பகை உணர்வு மனித உணர்வுகளிலேயே மிக மோசமான உணர்வாகும். இந்தப் பகை உணர்வு யார் அதை வெளிப்படுத்துகிறாரோ அந்த நபருக்கும், யார் மீது அது வெளிப்படுத்தப்படுகிறதோ அந்த நபருக்கும் விருப்பச் சேதத்தை ஏற்படுத்துகிறது. இந்தப் பகை மாம்சத்தின் கிரியைகளில் ஒன்றாக வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லையென்று நமக்கு எச்சரிப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. இந்த பகை உணர்வு கொடூரமானதாய் இருக்கிறபடியால்தான் சங்கீதக்காரன் **என் சத்துருக்களைப்பாரும் அவர்கள் பெருகி இருந்து உக்கிரப் பகையாய் என்னை பகைக்கிறார்கள்** என்று சொல்கிறார்( சங்கீதம்25:19). ஆதியில் காயீன் தன் சகோதரனாகிய ஆபேலை கொலை செய்ய காரணமாய்

இருந்தது இந்த பகை உணர்வு தான். நாம் தேவனுடைய பிள்ளைகள் ஆகி இத்தனை வருடங்கள் ஆகியும் இன்னும் பகை உணர்வு உடையவர்களாக இருந்தால் நாம் இன்னும் முதிர்ச்சி அடையவில்லை அல்லது பூரணராகவில்லை என்று தான் பொருள் படும். கிறிஸ்தவ ஜீவியத்தில் நாம் முதிர்ச்சி அடைய வேண்டுமென்றால் பகை உணர்வை கொண்டிராமல், நம் சத்துருக்களை கூட சிநேகிக்கிறவர்களாயிருக்க வேண்டும். ஆனால், நாம் மற்றவர்களிடத்தில் அன்பு செலுத்துவதற்கு பதிலாக பகையையும், வெறுப்பையும் காட்டுகிறவர்களாய் இருந்தால், ஆவிக்குரிய வளர்ச்சி அடையாதவர்களாகத் தான் இருப்போம்.

**II பகை உணர்வை நாம் மேற்கொள்ளாவிட்டால் அது பல்வேறு தீங்குகளுக்கு வழிவகுக்கும்.**

பகை விரோதங்களை எழுப்பும்; அன்போ சகல பாவங்களையும் மூடும் என்று நாம் நீதி.10:12 ல் வாசிக்கிறோம். இந்த பகை உணர்வு தான் யோசேப்பின் சகோதரர்கள் யோசேப்பை கொலை செய்ய யோசிக்க வைத்தது. ஆதி.37:4 ல் அவனுடைய சகோதரர் எல்லாரிலும் அவனை தங்கள் தகப்பன் அதிகமாய் நேசிக்கிறதை சகோதரர் கண்டபோது, அவனோடு பட்சமாய் பேசாமல் அவனை பகைத்தார்கள் என்று நாம் வாசிக்கிறோம். பின்பு அதே அதிகாரத்தில் பதினோராம் வசனத்தில் அவன் சகோதரர் அவன் மேல் பொறாமை கொண்டார்கள் என்று வாசிக்கிறோம். பின்பு இருபதாம் வசனத்தில் யோசேப்பின் சகோதரர் யோசேப்பை கொலை செய்யும் அளவுக்கு இந்த பகை உணர்வு யோசிக்க வைத்தது என்று பார்க்கிறோம்.

எனவே தான் பிரியமானவர்களே, இந்த பகை உணர்வை நாம் கண்டுகொள்ளாமல் இருந்தாலோ அல்லது கட்டுப்படுத்தாமல் இருந்தாலோ அது அபாயகரமான ஒன்றாக மாறி நம் சரீரத்துக்கும், ஆத்துமாவுக்கும் பெருத்த சேதத்தை ஏற்படுத்தும். இந்த பகை உணர்வு பழிவாங்கும் எண்ணத்தையும் கசப்புணர்வையும் உற்பத்தி செய்கிறபடியால் இதை நாம் முளையிலேயே களைந்தெறிய வேண்டும். தீமைக்கு தீமை செய்வது பேய்த்தனத்துக்கு அடுத்ததாகும்; நன்மைக்கு நன்மை செய்வது மனிதத் தன்மையாகும், தீமைக்கு நன்மை செய்வது தெய்வீகத் தன்மையாகும்.

**III பகை உணர்வை நாம் மேற்கொள்ளாவிட்டால் ஏற்படும் விளைவுகள்**

பிரியமானவர்களே, இந்த பகை உணர்வு நம் வாழ்க்கையிலிருந்து எவைகளையெல்லாம் பறிக்கிறது என்பதை அறிந்தால் நீங்கள் அதிர்ச்சியில் உறைந்து போவீர்கள். முதலில் இந்த பகை நம் ஒட்டுமொத்த மகிழ்ச்சியையும் பறித்து விடுகிறது.

பகை உணர்வு நம் இருதயத்தில் இருக்கும் வரை துக்கம் நம்மை ஆட்கொண்டு மகிழ்ச்சியை தொலைத்து விடுவோம். உதாரணமாக, சந்தோஷத்தை பறிகொடுத்த நபர்களை நாம் பட்டியலிட்டால் மற்றவர்கள் தங்களுக்கு எதிராக செய்த காரியங்களை மன்னிக்காமல் மனதிலேயே போட்டு அடக்கி வைக்கிறவர்களாகத்தான் இருப்பார்கள். அது மாத்திரமல்ல சுதந்திரமாக சுற்றித்திரிந்த நம்மை இந்தப் பகையுணர்வு அடிமைகளாக்கி விடுகிறது.

நாம் ஒருவரை பார்க்கும் போது அவரைப் பற்றிய சிந்தனைகளும், எண்ணங்களும் நம்மை ஆட்கொள்ளும். தலைவலி இரத்த அழுத்தம் இன்னும் பல விதமான உடல் உபாதைகளுக்காக மருந்துகள் எடுக்க வேண்டுமென்றால் பகைப்பதற்கென்று சிலரைத் தெரிந்து கொள்ளுங்கள். நாம் மற்றவர்களை பார்க்கும்போது அது நம் சிந்தனையை சிறைபிடித்து நம்மை அடிமைகளாக்குகிறபடியால் நம் உடல் உறுப்புகள் கடுமையாக பாதிக்கப்பட்டு, பகைக்காக நாம் மிகப்பெரிய விலையை கொடுக்க வேண்டும். நாம் மற்றவர்களை பகைக்கும்போது அதை ஒரு பாவமாகவே நாம் பார்ப்பதில்லை நாம் என்ன கொலையா செய்துவிட்டோம் என்று அதை கண்டு கொள்ளாமல் கடந்து செல்கிறோம். நாம் மற்றவர்களை பகைக்கும் போது கொலைகாரர்களாகிறோம் என்பதை அறியும்போது குலை நடுங்குகிறது. தன் சகோதரனை பகைக்கிற எவனும் மனுஷ கொலை பாதகனாயிருக்கிறான்; மனுஷ கொலைப்பாதகனெவனோ அவனுக்குள் நித்திய ஜீவன் நிலைத்திராது என்று அறிவீர்கள் (1 யோவான் 3:15). அப்படியென்றால் இந்த பகை உணர்வை நம் உள்ளத்திலிருந்து தூக்கி எறிய நாம் என்ன செய்ய வேண்டும்? பகைக்கு மாற்றாக அன்பு நம் உள்ளத்திலிருந்து ஊற்றெடுத்து வரவேண்டும். அதாவது நாம் ஒருவரை பகைத்து பல பிரச்சனைகளுக்கு ஆளாவதை விட, பகைக்கப்படுகிறவருடைய சிந்தனைகளால் நாம் ஆட்கொள்ளப்படுவதை விட அவரிடத்தில் அன்பு கூருவது எல்லாப் பிரச்சினைகளுக்கும் அருமருந்தாகும். அன்பு என்று வரும்போது அது மாயமற்றதாயிருக்க வேண்டும். அதேபோல்,நாம் சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்பு கூரவேண்டும் (1 பேதுரு 1:22).

எனவே அருமையானவர்களே, பகை உணர்வு நம் கிறிஸ்தவ ஜீவியத்தில் எப்படிப்பட்ட மோசமான தாக்கத்தை ஏற்படுத்துகிறதென்று பார்த்தோம். அநேகருடைய பகை உணர்வின் தன்மை, பகை உணர்வை நாம் மேற்கொள்ளாவிட்டால் அது பல்வேறுபட்ட தீங்குகளுக்கு வழிவகுக்கும் பகை உணர்வை மேற்கொள்ளாவிட்டால் அது நம் பரலோக பயணத்துக்கு பொருந்தகையாது இருக்கும் இந்த பகை உணர்வு தேவனால் அறவே வெறுக்கப்படுவதால் நாம் இதிலிருந்து விலகியிருப்பது அவசியமாயிருக்கிறது.

# கிறிஸ்து என்னும் மார்க்கம் பாடங்கள்
## பொய்யான மனித சபைகள்

சகோ. ஆபகூக் ஜேம்ஸ் ராஜகுமார், சென்னை.

**சென்ற மாத இதழின் தொடர்ச்சி...**

9. கி.பி. 1544 – மென்னோனைட் சர்ச், அனபாப்டிஸ்ட் இயக்கத்திலிருந்து பிரிந்து வந்தது. அவர்களுடைய தலைவனாகிய மென்னோ சைமன்ஸ் அவனுடைய பெயரை அவர்களுக்கு சபையின் பெயராக வழங்கினான். இந்த சபையில் பல பிரிவுகள் உள்ளன; சிலர் அனைத்து நவீன வசதிகளையும் நிராகரிக்கிறார்கள், சிலர் எளிமையான வாழ்க்கையை வாழ்கிறார்கள், சிலர் எல்லோரையும் போல வாழ்கிறார்கள். உள்ளூர் சபைகள் ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கும் ஒரு மாநாட்டை நடத்துகின்றன, ஆனால், அவற்றின் பெரும்பாலான நிகழ்ச்சிகள் பிராந்திய சபைகளில் நடக்கின்றன. கி. பி. 1693 இல் மென்னோனைட்டுகளிடமிருந்து அமிஷ் சபை பிரிந்துபோனது.

10. கி.பி. 1571 – டச்சு சீர்திருத்த சபை (DUTCH REFORM CHURCH) ஏறக்குறைய ஜான் கால்வின் உபதேசத்தை பின்பற்றுகிறது. அவர்களுக்கு அநேக பிரிவினைகள் உண்டு. கி. பி. 2004 இல், பழைய சபை, நெதர்லாந்தில் உள்ள சீர்திருத்த சபை மற்றும் நெதர்லாந்தில் உள்ள எவாஞ்சலிகல் லூத்தரன் சபை ஆகியவற்றுடன் இந்த சபைகள் இணைக்கப்பட்டன. நெதர்லாந்தில் (PKN) புராட்டஸ்டன்ட் சபையாக அவர்களின் புதிய பெயர் மாறியது. இது சீர்திருத்த மற்றும் சுவிசேஷ லூத்தரன் உபதேசங்களைக் கைக்கொண்டது.

11. கி.பி. 1608 – ஜான் ஸ்மித் தலைமையிலான ஜெனரல் பாப்டிஸ்ட் சர்ச் (The GENERAL BAPTIST CHURCH) ஹாலந்தின் ஆம்ஸ்டர்டாமில் (Amsterdam, Holland) 1608/09 இல் ஸ்தாபிக்கப்பட்டது. அதன் உறுப்பினர்கள் மதத் துன்புறுத்தலில் இருந்து தப்பிக்க இங்கிலாந்திலிருந்து வெளியேறிய அகதிகள். மென்னோனைட்டு சபையாரின் உபதேசத்தில் சில பாகங்களை ஆரம்ப உறுப்பினர்கள் ஏற்றுகொண்டார்கள். ஆரம்பத்தில் அவர்கள் ஒரு **உடன்படிக்கை சபை** யாக இருந்தார்கள். அவர்கள் விசுவாசமுள்ளவர்களின் தனிப்பட்ட அறிக்கையும் கிறிஸ்துவின் மேலான விசுவாசத்தையும் விசுவாசமுள்ளவர்களின் ஞானஸ்நானத்தையும் ஏற்றுக்கொண்டார்கள். ஆயினும், அவர்கள் 1640– தொடங்கி ஞானஸ்நானத்தை முழுக்குதலாக மாத்திரம் கைகொள்ள முடிவு செய்தனர். ஒருவர் கிருபையிலிருந்து வீழ்ந்துபோக முடியும் என்று அவர்கள் விசுவாசிக்கிறார்கள்.

12. கி.பி. 1616 ல் குறிப்பிட்ட பாப்டிஸ்ட்கள் ஹென்றி ஜேக்கப்

(HENRY JACOB) தலைமையில் ஒரு புதிய சபையாக ஆனார்கள். கிறிஸ்துவானவர் ஒரு குறிப்பிட்ட கூட்டத்தாருக்காக அதாவது தெரிந்துகொண்டவர்களுக்காக மட்டுமே மரித்தார் என்று அவர்கள் விசுவாசித்தார்கள். அவர்கள் ஜான் கால்வினின் உபதேசங்களை அதிகமாக ஏற்றுக்கொள்கிறார்கள். அவர்கள் விசுவாசமுள்ளவர்களின் ஞானஸ்நானம் மூழ்குதலாக இருப்பதையும் மற்றும் ஒரு முறை இரட்சிக்கப்பட்டவர் எப்போதும் இரட்சிக்கப்படுகிறார் என்றும் போதிக்கிறார்கள். ஆரம்பத்தில் அவர்கள் தெளிப்பும் ஊற்றுதலும் செய்தாலும், கி. பி. 1638 தொடங்கி முழுக்கு ஞானஸ்நானத்தை மட்டுமே கைகொண்டார்கள்.

13. கி.பி. 1650 – குவாக்கர்கள் (QUAKERS) பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலை உறுதிப்படுத்தி, சடங்குகளையும் மற்றும் நியமித்த குருமார்களையும் நிராகரித்தனர். அவர்களின் பெரிய வழிநடத்தினவன் ஜார்ஜ் ஃபாக்ஸ் (George Fox) என்பவன் ஆவான். அவர்கள் ''**உள் ஒளியை**'' நம்பி, தேவனை நேரடியாக அறிந்து கொள்வதையும் விசுவாசிக்கிறார்கள். ஆகையால், ஆராதனையில் அவர்கள் அமைதியாக உட்கார்ந்து, தேவன் அவர்களிடம் பேசுவதற்காகக் காத்திருக்கிறார்கள். அவர்களின் வெளிச்சம் அல்லது ஒளி ஒரு மாயமான அனுபவத்தை மட்டுமல்ல மற்றவர்களுக்கு நன்மை செய்ய தேடுகிற விளைவும் கூட இருக்க வேண்டும் என்று நம்புகிறார்கள்.

14. கி.பி. 1739 – ஆங்கிலிகன் சபையை விட்டுவிடாத வெஸ்லி சகோதரர்களின் ஊழியத்தின் மூலமாக **மெதடிஸ்ட் சபைகள்** (METHODIST CHURCHES) எழுந்தன. அவர்களின் முதல் மாநாடு 1744 இல் நடைபெற்றது. 1787 வாக்கில் மெதடிஸ்ட் பிரசங்கிகள் ஆங்கிலிகன் சபையிலிருந்து விலக்கப்பட்டனர். இன்று 75 மில்லியன் உறுப்பினர்களைக் கொண்ட அமெரிக்க காலனிகளில் மெதடிஸ்ட் சர்ச் வலுவாக வளர்ந்து வருகிறது.

15. கி.பி. 1789 – அமெரிக்க ஐக்கிய மாகாணங்களில் முதன் முதலில் எபிஸ்கோபல் சபை (THE EPISCOPAL CHURCH) ஆங்கிலிகன் சபையாரால் உருவாக்கப்பட்டது. இது 1789 இல் பென்சில் வேனியாவின் பிலடெல்பியாவில் ஸ்தாபிக்கப்பட்டது. இன்று ஆதிக்கம் செலுத்தும் தாராளவாதக் கருத்துக்களை சீக்கிரமாக இந்த சபை ஏற்றுக்கொண்டார்கள். அவைகள் அதை இன்றைக்கும் கட்டுப்படுத்துகின்றன. அனைத்து விசுவாசிகளுக்கும் இருக்கிற மரபுவழி கிறிஸ்தவ நம்பிக்கையை அமெரிக்க எபிஸ்கோபல் சபை இனி நம்புவதில்லை.

16. கி.பி. 1830 – மார்மன் சபை (THE MORMON CHURCH), கடைசி நாட்களின் பரிசுத்தவான்களின் கிறிஸ்துவின் சபை என்பது ஏப்ரல் 6, 1830, ஃபயேட், நியூயார்க் (Fayette, New York), அமெரிக்காவில் ஜோசப் ஸ்மித் (JOSEPH SMITH) என்பனால் தொடங்கப்பட்டது.

ஸ்மித்தின் கடைசி நாட்களின் வெளிப்படுத்துதலை இந்தப் பிரிவு நம்புகிறது. கடந்த காலத்தில் பலபெண்களை மணந்துகொள்ளும் பழக்கம் அவர்களுக்கு இருந்தது. சில உறுப்பினர்கள் இன்னும் அதைச் செய்கிறார்கள். அமெரிக்காவின் உட்டா (Utah) மாநிலத்தில் உப்பு ஏரி (Salt Lake) பட்டணத்தில் அவர்களுக்கு ஒரு தலைமையகமும் ''தேவாலயம் உள்ளது.

17. கி.பி. 1846 – ஏழாவது நாள் அட்வெண்டிஸ்ட் சபை (SEVENTH DAY ADVENTIST CHURCH) மே 21, 1863 இல் பேட்டில் க்ரீக், மிச்சிகன், யுனைடெட் ஸ்டேட்ஸ் (BATTLE CREEK, MICHIGAN, UNITED STATES) ல் தொடங்கியது, இது 1843 இல் கிறிஸ்துவின் வருகையை உறுதியளித்த மில்ல ரைட் இயக்கத்திலிருந்து (Mille rite movement) வந்தது. இது ஜோசப் பேட்ஸ், ஜேம்ஸ் மற்றும் எலன் ஜி. வைட் மற்றும் ஜே.என். ஆண்ட்ரூஸ் (Joseph Bates, James and Ellen G. White and J. N. Andrews) ஆகியோரால் தொடங்கப்பட்டது. இந்த சபை சனிக்கிழமை ஓய்வுநாளில் ஆராதனை செய்கிறது; அவர்களின் உறுப்பினர்கள் என்ன உணவை உண்ணலாம் என்பதைக் கட்டுப்படுத்துகிறது.

18. கி.பி. 1872 – யெகோவா சாட்சிகள் அல்லது கிங்டம் ஹால் (JEHOVAH'S WITNESS OR KINGDOM HALL), அமெரிக்காவின் பென்சில்வேனியா, பிட்ஸ்பர்க் (Pittsburg, Pennsylvania, USA) ல் சார்லஸ் ரஸ்ஸல் (Charles Russell – 1852–1916) என்பவரால் தொடங்கப்பட்டது. அவர்களின் ஆரம்ப பெயர் பைபிள் மாணவர் இயக்கம் என்பது ஆகும். கி. பி. 1914–ல் அவர்கள் பெயரை சர்வதேச பைபிள் மாணவர்கள் சங்கம் (International Bible Students Association) என்று மாற்றினார்கள். அவரும் மற்றவர்களும் கிறிஸ்து திரும்பி வருவார் என்று 1878, 1881, 1914, 1918 மற்றும் 1925 ஆகிய வருடங்களில் தீர்க்கதரிசனம் உரைத்தார்கள். ரஸ்ஸல் மரித்த பிறகு, அவர்கள் 4 குழுக்களாகப் பிரிந்து போனார்கள். ''**நீதிபதியாகிய**'' ஜோசப் ரதர்ஃபோர்ட் (Joseph "Judge" Rutherford) என்பவன் கண்காணிப்பு கோபுரம் (Watch Towers) பத்திரிகையும் மற்றும் கண்காணிப்பு கோபுரம் (Watch Towers பைபிள் மற்றும் கைப்ரதி சங்கம் ஆகியவற்றின் கட்டுப்பாட்டைப் பெற்றான். ரதர்ஃபோர்டு உபதேசங்களை மாற்றினதால், அநேகர் அவனை விட்டுவிட்டார்கள். 1931–ல் அவர்கள் யெகோவாவின் சாட்சிகள் என்ற பெயரை ஏற்றுக்கொண்டு மற்ற குழுக்களைவிட மிகப்பெரிய குழுவாக வளர்ந்தனர். இவர்கள் இரத்த தானத்தையும், கிறிஸ்துமஸ் பண்டிகையையும், பிறந்தநாள் விழாக்களையும் நிராகரிக்கிறார்கள். பல புதுமையான அல்லது அந்நியமான உபதேசங்களை அவர்கள் கைக்கொள்ளுகிரார்கள். அவர்களின் தலைவர்கள் தங்கள் உறுப்பினர்களின் மீது அதிக கட்டுப்பாட்டை செலுத்துவதற்காக மெய்யாகவே ஒரு CULT (வழிபாட்டு முறை) ஆக நடக்கிறார்கள்.

19. கி.பி. 1879 – விஞ்ஞானிகளின் கிறிஸ்துவின் சபை (THE CHURCH OF CHRIST, SCIENTIST), மேரி பேக்கர் எடி (MARY BAKER EDDY) என்பவளால் ஸ்தாபிக்கப்பட்டது. இவள் அறிவியல் மற்றும் ஆரோக்கியம் வேதத்தின் திறவுகோல் என்கிற புத்தகத்தை 1975 எழுதினாள். இது போன்ற ஒரு ''**கிறிஸ்தவ விஞ்ஞானிகள்**'' சபை முதன்முதலில் அமெரிக்காவின் கிளிவ்லேன்ட், ஓஹியோ (Cleveland, Ohio) வில் ஜெனரல் எராஸ்டஸ் என். பேட்ஸ் (General Erastus N. Bates) என்பவரால் 1877 ல் அமைக்கபட்டிருந்தது.

20. கி.பி. 1901 – பெந்தெகோஸ்தே சபை (THE PENTECOSTAL CHURCH) திரு. பர்ஹாம் மற்றும் திரு. சீமோர் (Mr. Parham and Mr. Seymour) என்பவர்களால் அமெரிக்கா, கன்சாஸ் மாநிலத்தின் டோபேகா (Topeka, Kansas, USA) பட்டணத்தில் தொடங்கப்பட்டது. பெந்தேகோஸ்தே இயக்கத்தில் அநேக பிரிவுகள் உண்டு. அதிகமான பிரிவுகளில் உறுப்பினர்கள் அந்நியபாஷைகளில் கட்டாயமாக பேசவேண்டும் என்றும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தின் மூலமாக தேவனோடு நேரடியான தனிப்பட்ட அனுபவத்தைப் பெறுகிறார்கள் என்றும் அவர்கள் விசுவாசிக்கிறார்கள். சில குழுக்கள் தங்களிடம் அப்போஸ்தலர்கள் மற்றும் குணப்படுத்துபவர்கள் மற்றும் அற்புதம் செய்பவர்கள் இருப்பதாக தெரிவிக்கிறார்கள். இந்த சபைகளில் அவர்களுடைய தலைவர் தீர்க்கதரிசியாய் இருக்கிறார்; அவருடைய உபதேசம் அந்த சபையின் மைய போதனையாக இருக்கிறது.

21. கி.பி. 1947 – ல் இந்தியா, பாகிஸ்தான் சுதந்திரம் அடைந்தபோது, தென்னிந்திய திருச்சபை (Church of South Indla, CSI); வட இந்திய திருச்சபை Church of North India, CNI) மற்றும் பாகிஸ்தான் சபை (CHURCH OF PAKISTAN) செப்டம்பர் 27, 1947 ல் அமைக்கப்பட்டது. இது, ஆங்கிலிகன், காங்கிரேஷனல், பிரஸ்பைடிரியன் மற்றும் மெதடிஸ்ட் ஆகிய நான்கு சபைகள், தென்னிந்தியா மற்றும் வட இந்தியா மற்றும் பாகிஸ்தானின் சபைகளாக ஒரே அமைப்புள்ள சபையாக மாற ஒப்புக்கொண்டன. அவர்கள் முக்கியமாக ஆங்கிலிகன் உயர் சபையின் வழிபாட்டைப் பின்பற்றுகிறார்கள். ஆனால், அது அவர்களின் ஆராதனையின் முறை பழைய சபையைப்போல இருக்கிறது.

22. கி.பி. 1954 – சன் மியுங் மூன் (SUN MYUNG MOON) என்பவனால் மே 1, 1954 அன்று தென் கொரியாவின் சியோலில் (SEOUL, SOUTH KOREA) ல் யூனிஃபிகேஷன் சபை (UNIFICATION CHURCH) தொடங்கப்பட்டது. MOON என்பவனின் உபதேசம் என்பது ஒரு மதமாக திருமணத்திலும் மற்றும் குடும்பத்தின்மேலும் ஸ்தாபிக்கப்பட்டது. இந்த உபதேசத்தில் கன்பூசியஸ் என்பவர்களின் நம்பிக்கைகளும் கிறிஸ்தவ நம்பிக்கைகளும் கலக்கப்பட்டுள்ளது.

1957 ஆம் ஆண்டில் MOON மூன் என்பவன் தெய்வீகக் கோட்பாட்டின் விளக்கங்கள் என்கிற புத்தகத்தை அச்சிட்டு வெளியிட்டான். அது பரிசுத்த வேதத்திற்கு புதிய அர்த்தத்தைக் கொடுத்தது, அவனை பின்பற்றுபவர்கள் அவர்களுடைய சொந்த வேதமாக அதை மதித்து கைக்கொள்கிறார்கள்.

தேவனை சர்வவல்லமையுள்ளவராக அவர்கள் விசுவாசிக் கிறார்கள்; ஆனால் அவர் ''மனித மயமாக்கப்பட்டிருக்கிறார்.'' ஏனெனில் அவர் தனது குழந்தைகளின் பரஸ்பர அன்பு இல்லாமல் அவரால் பரிபூரணமாய் இருக்கமுடியாது என்கிறார்கள். இயேசு தேவனுடைய மகனாக எப்படி இருந்தாரோ (அதாவது, தெய்வீக மானவராய் இருந்தாலும், மெய் தேவனாக இருந்ததில்லை) அப்படியே எல்லா ஆண்களும் பெண்களும் தேவ பிள்ளைகளாக இருக்க வேண்டும் என்று போதித்தான். இன்னும் ஆதாமும் ஏவாளும் பாவம் செய்யவில்லையானால், ''**இயேசுவான வருடைய பரிபூரணத்துடன் எல்லா ஆண்களும் பெண்களும் இருந்திருப்பார்கள்**'' என்று எழுதினான். தேவனை மையமாகக் கொண்ட (நீதியை நோக்கி) குடும்பங்களை ஸ்தாபிக்க தேவன் விரும்புகிறார் என்றும், குடும்பம் உலகத்தின் அஸ்திபாரமே என்றும் கூறு கிறார்கள்.

23.கி.பி. 1958 – யுனைடெட் பிரஸ்பைடீரியன் சபை (UNITED PRESBYTERIAN CHURCH) மே 28, 1958 ல் ஸ்தாபிக்கப்பட்டது. இது ஒரு புதிய சபை அல்ல; இரண்டு பழைய சபைகள் வடக்கு அமெரிக்காவின் யுனைடெட் ப்ரீபைடீரியன் சபையும் அமெரிக்கா வில் உள்ள பிரஸ்பைடேரியன் சர்ச் இணைக்கபட்டிருந்தார்கள். இந்த சபைக்கு சுமார் 30 லட்சம்பேர் உறுப்பினர் உண்டு. இந்த சபை தாராளவாத உபதேசங்களுகாக தெரிந்துகொள்ளபட்டது; அதாவது பெண்களையும், ஓரினச்சேர்க்கை சமூகத்தாரையும் மூப்பர் களாகவும் சுவிசேஷ ஊழியர்களாயும் நியமிக்கிறார்கள்.

24. இவைகள் மட்டுமல்லாமல் மனிதர்கள் தாங்கள் எண்ணின பெயரிலே தங்கள் சொந்த உபதேசங்களோடு சபைகளை ஆரம்பித்து நடத்துகிறார்கள். இவைகளின் எண்ணிக்கை ஏராளம்.

ஆனால், அனைவரும் கிறிஸ்துவானவர் ஸ்தாபித்த அவருடைய கிறிஸ்துவின் சபைக்கும், கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு சத்தியத்திற்கும் திரும்பவேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார், ஆமென்.

✝

# உயிரோடிருக்கிறவரை மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன?

சகோ. K.M. பிலிப் – பவானி

**அ**ன்பான வாசகர்களுக்கு இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். நம்மை வழுவாமல் காத்து வருகிற வேதாகமத்தில் அநேகக் கேள்விகள் உண்டு. அவைகளில் சில ஞானத்தை கொடுக்கும்; சில புத்தியைத் தெளிவிக்கும்; சில தவறைச் சுட்டிக்காட்டும்; சில நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தும். இங்கும் கூட தேவதூதர்கள், இயேசுவிடம் அன்பும், பாசமும், பக்தியும், பிரியமும், கரிசனையும் கொண்ட ஸ்திரீகளைப் பார்த்து, **உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறது என்ன?** என்று தவறை சுட்டிக்காட்டி புத்தியை தெளிவிக்கும் ஒரு கேள்வியைக் கேட்டார்கள் [லூக். 24:5]. இப்படி ஒரு கேள்வி கேட்கப்பட இவர்கள் செய்த மதியீனமான காரியம் என்ன? சிலுவையில் மரித்து அடக்கபண்ணப்பட்ட இயேசுவுக்கு அந்த நாளின் வழக்கப்படி மூன்றாம் நாளில் செய்ய வேண்டிய சடங்குகளை செய்ய ஆர்வத்தோடு கல்லறைக்கு வந்தார்கள். தேவதூதர்கள் அவர்களிடம் கேள்வி கேட்ட தோடு அவர்கள் செய்யும் தவறையும் சுட்டிக்காட்டத் தவறவில்லை. **மனுஷ குமாரன்... சிலுவையில் அறையப்படவும், மரிக்கவும், மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்திருக்கவும் வேண்டும் என்பதாக இயேசுவே அவர்களிடம் சொன்னதை நினைவு படுத்தினார்கள்.** அப்பொழுது அவர்கள் அவருடைய வார்த்தை களை நினைவு கூர்ந்து திரும்பிச் சென்று இயேசு உயிர்த் தெழுந்தார் என்ற நற்செய்தியை எல்லோருக்கும் அறிவித்தார்கள்.

பக்திக்குரியவர்களே! இவ்வரலாற்றிலிருந்து [லூக். 24:1–10] நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பக்திக்குரிய ஆலோசனைகளை ஆராய்வோம். முதலாவது, **ஒருவன் தேவ பக்தியுள்ள வனாயிருந்து அவருக்குச் சித்தமானதை செய்ய வேண்டும்** [யோ.9:31] என்பதில் தேவ சித்தத்தை செய்வதே பக்தி என்பதை புரிந்து கொள்ளவேண்டும். இங்கு, அவர்கள் அவருடைய வார்த்தையை நினைவு கூர்ந்தார்கள் என்பதில், **இயேசு மூன்றாம் நாளில் உயிர்த்தெழுவார்** என்பதை ஏற்கனவே இவர்கள் அறிந்த ஒன்றுதான். அப்படியென்றால், அறிந்தும் **உயிரோடிருக்கிறவரை மரித்தோரிடத்தில் தேடலாமா?**. இன்றும் வேதம் தெளிவாய் கூறும் காரியங்களைக் கருத்தாய் கவனிக்காமல் தொடர்ந்து தவறு செய்தால் நியாயத்தீர்ப்பில் **நாங்கள் அறியோம்** என்பது சொல்லித் தப்பிக்க முடியுமா? அன்று உயிர்த்தெழுந்த இயேசு இன்றும் பரலோகத்தில் தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்

என்பதே வேதம் நமக்குக் காட்டும் தெய்வீகத் தன்மை (அப். 7:55,55). **மரித்தேன், ஆனாலும் இதோ சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன்**'' (வெளி. 1:18) என்று இயேசுவே தன் நிலையை விளக்கியிருக்கிறார். ஆனாலும், இன்றும் கிறிஸ்தவ மத உலகில் வருடம் ஒருமுறை, இயேசு மரித்தார் என்று 40 நாட்கள் துக்கமுகமாய், அழுது புலம்பி உபவாசமிருப்பவர்களுக்கு அதே வேதத்தில், **உயிரோடிருக்கிறவரை மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன?**'' என்ற தேவ தூதனின் கேள்வியில் நியாயம் இருப்பது தெரிய வில்லையா?

இச்சரித்திரத்தில் ஸ்திரீகள் தேடி வந்ததற்கான காரணத்தை கவனிப்போம். அடக்கம் பண்ணப்பட்ட இயேசுவுக்கு உலக வழக்கப்படி செய்ய வேண்டிய காரியங்களுக்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் இயேசுவின் உயிர்த்தெழுதல் என்ற அதி முக்கியமான வார்த்தையையே மறக்கடிக்கச் செய்துவிட்டன. **லௌகிக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களைக் கொள்ளை கொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்க** வேண்டியது நம் கடமை என்பதை மறந்துவிடாதீர்கள். ஏனெனில், அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும், உலக வழிபாடுகளையும் பற்றினதேயல்லாமல் கிறிஸ்துவைப் பற்றினதல்ல (கொலோ. 2:8). இத்தகு உலக மாய்மாலமான காரியங்கள் சத்திய வார்த்தையை மறக்கடிக்கச் செய்து விடுகிறது. ஆனால், தேவ வார்த்தையை மட்டும் ஏற்றுக்கொண்டு அதன்படி செய்தால் அந்த விசுவாசம் உங்களுக்குள்ளே பெலன் செய்யும் (1தெச. 2:13). ஒருவேளை, அந்த ஸ்திரீகள் ஒரு முறை, எப்பொழுதோ கேட்டதாலும், நடந்த கொடூரமான சிலுவைக் காட்சிகளாலும் இயேசு சொன்னதை அவர்கள் மறக்க வாய்ப்புண்டு. ஆனால் 2000 ஆண்டுகளாக, இயேசு உயிர்த்தெழுந்த வாரத்தின் முதல் நாளிலே இயேசுவின் நாமத்தில் கூடி, **மரித்தேன்; ஆனாலும் சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன்** என்ற ஜீவனுள்ள வார்த்தைகளை தியானிக் கிறவர்கள், இயேசு சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறார் என்பதை எப்படி மறக்க முடியும்? ஆம், உலக மாயையான பக்தியே சத்தியத்தை மறக்கச் செய்தது. உண்மையை உணர முடியாமல் செய்திருக்கிறது.

இரண்டாவதாக, அறியாமை அவர்களை மரித்தோரிடத்தில் தேட செய்தது. **நீங்கள் தேவ வாக்கியங்களையும் தேவனுடைய வல்லமையையும் அறியாததினால் தப்பான எண்ணங் கொள்கிறீர்கள்**'' என்று இயேசுவே மக்களுக்குச் சுட்டிக்காட்டினார் (மத். 22:29). வேதத்தை பகுத்தறிவோடு ஆராய்ந்து அறிய வேண்டும். ''**வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்.**

**அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டு** (யோவான். 5:39) ஏதோ ஒரு வழியில் செல்வதல்ல. **நானே வழி** வேறு வழிகள், மனித உபதேசங்கள் நித்திய ஜீவனுக்குள் கொண்டு சேர்க்காது. கிறிஸ்தவம் ஜீவனுள்ள மார்க்கம். செத்த கிரியைகளுக்கு இடமில்லை. நாம் இப்பிரபஞ்சத்திற்கு ஒத்த வேசந்தறியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும், பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்க மனம் உடையவர்களாயிருக்க வேண்டும் (ரோமர். 12:2). எனக்குத் தெரியாது, நான் அறியவில்லை என்று சாக்குப்போக்கு சொல்ல முடியாது. அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். இப்பொழுது நம்முடைய பக்தி காரியங்கள் தேவ ஆலோசனைப்படி அமைந்திருக்கிறதா? தேவ வார்த்தைகளுக்கு ஒத்து வருகிறதா? நம் பக்தி வாழ்க்கை புதிய ஏற்பாட்டிலுள்ள கிறிஸ்துவின் உபதேசப்படி இருக்கிறதா? என்பதில் நாம் சரியாயிருக்க வேண்டும். தேவ வார்த்தைகளைத் தள்ளிவிட்டு நாம் தப்பித்து விடலாம் என்று ஒருபோதும் எண்ணி ஏமாந்து விடக்கூடாது. **ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்க பலனை அடையும் படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்.** (2.கொரி. 5:10) ஆகவே நாம் ஒன்றான மெய் தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசுவையும் அறிவதே நித்திய ஜீவன் (யோவான். 17:3) என்பதை சரியாய் புரிந்து கொண்டு அறிந்து அதன்படி செய்வோம். நாம் தடவியாகிலும் கண்டுகொள்ள முடியும். ஆனால், கண்களி லிருந்தும் குருடர்களாயிருப்பது எப்படி? மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று அறிந்திருக்கிறோம். மரணம் இனி அவரை ஆட்கொள்வதில்லை என்பதும் நமக்கு தெரியும் (ரோமர். 5:9). இப்படியிருக்க வருடம் ஒருமுறை கிறிஸ்து மரித்தார் என்று உயிரோடிருப்பவரை மரித்தோரிடத்தில் தேடும் பாவத்தை, மீறுதலை, அவபக்தியை நம்மை விட்டு அகற்றுவோம். தொடர்ந்து இப்படி செய்யும் நம் மனித இனத்திற்கு எடுத்துச் சொல்வோம்.

மரித்தோரிடத்தில் தேடும் மற்றுமொரு செயல், நியாயப்பிரமாணத்தை பக்திக்குரிய வாழ்க்கையாக நடைமுறை படுத்துவதாகும். ஓய்வு நாளை ஆசரிப்பது, பண்டிகைகள் கொண்டாடுவது, இசைக்கருவிகளோடு, கைத்தாளம் போட்டு ஆடலுடன் பாடுவது, தசமபாகக் காணிக்கையை கொடுப்பதில் கட்டாயப்படுத்துவது (2 கொரி. 9:5,7) போன்ற செயல்களை தொழுகையில் நடைமுறைப்படுத்துவது மரித்தோரிடத்தில் தேடும் செயலாகும். நியாயப்பிரமாணம் குறித்து பவுல் கூறுகிறார்,

இப்பொழுதோ நாம் பழமையான எழுத்தின்படியல்ல, புதுமையான ஆவியின்படி ஊழியஞ் செய்யத்தக்கதாக நம்மைக் கட்டியிருந்த நியாயப்பிரமாணத்திற்கு நாம் மரித்தவர்களாகி, அதினின்று விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம் (ரோ. 7:6). அதாவது, நியாயப்பிரமாணத்திற்கும், நமக்கும் சம்பந்தமில்லை; மரித்த நிலைதான். காரணம் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாய் இருக்கிறார் (ரோ. 10:4). எப்படியென்றால், சட்ட திட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தை நம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, அதாவது அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து அவைகளின் மேல் சிலுவையில் ஆணியடித்து வெற்றி சிறந்தார் (எபே. 2:15 – கொலோ. 2:14). ஆகவே, புதிய உடன்படிக்கைக் குரியவர்களாகிய நம்மை பொறுத்து நியாயப்பிரமாணம் மரித்துவிட்டது. அப்படியென்றால் மரித்தோரிடத்தில் ஜீவனுள்ள தேவனைத் தேடுவது பக்திக்குரிய காரியமாகுமா? இன்று நியாயப்பிரமாணத்தை கைக்கொள்வது என்பது இயேசுவை மரித்தோரிடத்தில் தேடுவதாகும்.

அன்பான தேவ ஜனமே! ஜீவனுள்ள சத்தியத்திற்கு மட்டும் கீழ்ப்படியும் வாய்ப்பு பெற்ற நாம், இத்தேவதூதர்களின், ''**மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன**'' என்ற கேள்விக்கு உட்பட்டவர்களல்ல. அதேசமயம் இப்படிப்பட்ட மாயமான பக்தியால் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டிருப்பவர்களிடம் இக்கேள்வியை கேட்கலாம் அல்லவா? அந்த ஸ்திரீகள் இக் கேள்வியினால் தங்களைத்தாங்களே உணர்ந்து, இயேசுவின் வார்த்தைகளை நினைவுகூர்ந்து கல்லறையை விட்டு மரித்தோரிடத்தை விட்டுத் திரும்பி போனார்கள். அறியாதிருந்த அவர்கள், அறிந்து நற்செய்தியை மற்றவர்களுக்கு அறிவிக்கும் பாக்யமும் பெற்றவர்களானார்கள்.

பிரியமானவர்களே! ''நம் சரீர முயற்சிகள் அற்ப பிரயோசனமுள்ளது. தேவ பக்தியானது இந்த ஜீவனுக்கும், இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது (1.தீமோ. 4:8). ஆகவே, உயிர்த்தெழுந்த இயேசுவை மரித்தோரிடத்தில் தேடாமல், ஜீவனுள்ள வார்த்தையில் தேடுவோம்; கண்டடைவோம். ஆமென்!! ✝

**நம் பூலோக வாழ்விலும், மறுமைக்கான வாழ்விலும் என்ன செய்கிறோம், ஏன் செய்கிறோம் என்னும் புரிதலோடு, என்ன செய்யக்கூடாது, ஏன் செய்யக்கூடாது என்ற புரிதலும் மிகவும் முக்கியம்.**

## மார்ச் 2-4, 2023 தேதிகளில் ஏற்காடு மலையில் நடந்த ஊழியர் கருத்தரங்கின் போது...





**"Registered" with RNI No: TNTAM/2006/20446**
Postal regn. No. Erode/26/2021 - 2023
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2021 - 2023**
Date Of Publication: 17/18 th of Every Month
Date Of Posting: 20/21 of Every Month
Place Of Posting: Erode HPO


**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
- ஆசிரியர்


## எங்களது இதர வெளியீடுகள்


**தபால் செலவிற்கு**
**பணம் அனுப்பி**
**இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.**




















**வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில்**
**ஒரு புதிய அத்தியாயம்**
- Advanced Bible Correspondence Course -

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.

To:

**திருமறை தியானம்**
**நம்பிக்கை** தொலைக்காட்சியில்

| | |
|---|---|
| செவ்வாய் | காலை 6:30 - 7:00 மணி |
| வெள்ளி | காலை 7:30 - 8:00 மணி |


Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.